விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 17 திங்கட்கிழமை (30.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101





# மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை பரிசீலிக்க அரசாங்கம் தயார்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

மனிதாபிமான மோதல் இடைநிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கும் அதேவேளை, இலங்கை அரசினால் முன்வைக்கப்படும் சில மாதிரிகளை சர்வதேச சமூகம் உறுதியாகக் கடைப்பிடிக்க முன்வரும் பட்சத்தில் சர்வதேச செயலணியை அனுமதிக்க முடியும் என பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



புதுமாத்தளன் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள்

## நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு இணக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைக்கத் திட்டம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின்(IMF) நிபந்தனைகளுக்கு இணங்கி அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இலங்கை அரசாங்கம் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை குறைப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் பெரும் தொகையான நிதியை கடனாகக் கோரி வருகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் பசில் எம்.பி. வாஷிங்டனில் சந்திப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அதிகாரிகளை அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் சந்தித்து நிதியுதவி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞன் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தேவராஜா றொஷான் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஹோம்ஸ் - பத்மநாதன் பேச்சு சீற்றத்தில் இலங்கை அரசாங்கம்

### நடவடிக்கை எடுக்கவும் திட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரதிநிதி குமரன் பத்மநாதனுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் தொலைபேசியில் பேச்சுக்களை நடத்தியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று இடம்பெறாது என யாழ்.சிவில் நிர்வாக காரியாலய அலுவலகர் மேஜர் அருணசிறி அறிவித்துள்ளார். கப்பல் சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (சு)

## வன்னிக் களமுனையில் நேற்றும் கடும் மோதல்


(கொழும்பு)

வன்னிப் போர்முனைகளில் கடந்த இரண்டு தினங்களில் விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்ற கடும் மோதல்களின் பின்னர் பழமாத்தளனுக்கு வடக்கே விடுதலைப்புலிகள் அமைத்திருந்த மண் அரண் பகுதியையும் அதனோடு இணைந்த அகழிப் பகுதியையும் இராணுவத்தினர் கைப்பற்றிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின்றது.

இந்தச் சண்டைகளில் 46 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாக அது தெரிவித்துள்ளது.

இதேவேளை படையினரின் 7ஆம் சிங்க ரெஜிமண்ட் மற்றும் 20ஆம் கஜபாகு ரெஜிமண்ட்மீது சுமார் 300 பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் தீர்வு அவசியம்!



### ரணில் வலியுறுத்தல்

(கொழும்பு)

யுத்தத்தைக் காரணம் காட்டி மக்களின் ஜனநாயக உரிமைகளை மட்டுப்படுத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாணந்துறை ஹொரக்கானப் பகுதியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் அகோர ஷெல் வீச்சு 16 சிறுவர்கள் உட்பட 49 பேர் பலி

### 27 சிறுவர்கள் உட்பட 125 பேர் படுகாயம்

(வவுனியா)

வன்னியில் மக்கள் வாழ்விடங்களில் நேற்று வீழ்ந்து வெடித்த அகோர எறிகணைகளினால் 16 சிறுவர்கள் உட்ட 49 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 27 சிறுவர்கள் உட்பட 125 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலைஞர்மடத்தில் உள்ள மக்கள் வாழ்விடங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef

# கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற்கல்லூரிக்கு இரண்டாம் மொழி (தமிழ்)பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 08 ஆம் திகதி யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் இடம் பெறவுள்ளதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட் டோரின் விபரம் வருமாறு,

பா.பிருந்தா-நாவலர் வீதி நல்லூர் தெற்கு, அந்தோனி வின்ஸ்லஸ் றொனி-கொட்டடி வீதி குருநகர்,சேகர் நிக் வின்ரன்-ரஜீதர் வீதி யாழ்ப்பாணம்,ம.பிரதா-வீரபத்திரர் கோவிலடி கரணவாய் வடக்கு,அ.இளவேணி-பாடசாலை ஒழுங்கை தாவடி தெற்கு,சி.தவரூபிகா-கன்னாதிட்டி ஒழுங்கை,

இ.பிரியதர்சினி-வி.எச்.ஒழுங்கை கோப்பாய் தெற்கு,த.சிந்துஜன்-காளிகோவிலடி அச்சுவேலி தெற்கு,த.பவித்திரா-கரவெட்டி கிழக்கு,வி.கௌதமி-நல்லூர், இ.ருசிபன்-நவாலி 1ஆம் ஒழுங்கை ஆனைக்கோட்டை, பி.அகல்யா-டிஸ்பென்சறி றோட் மட்டுவில் வடக்கு,த.பானுகா-அரசடி ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு,

ப.தர்சிகா-திருநெல்வேலி கிழக்கு, த.வினோஜித்-பொற்பதி வீதி கொக்குவில் ,வி.மயூரா-பழைய வீதி கோப்பாய் தெற்கு, தி.மகேஸ்வரன்-குடத்தனை மேற்கு,வே.சுலேகா-டச்சு வீதி உடுவில்,நா.மனோலயா-செபஸ்தியார் ஒழுங்கை ஓட்டுமடம் ,ந.நிறோசலா-செம்மணி வீதி நல்லூர்,ம.சோபனா-கல்லூரி வீதி நீராவியடி, ம.ஜேன் நிறோயினி-சென்.யூட்ஸ் ஒழுங்கை இளவாலை,

வி.விமல்ராஜ்-அராலி கிழக்கு வட்டுக்கோட்டை ,த.சிபிகா-6ஆம் வட்டாரம் வேலணை மேற்கு,க.ஜீவனா-4 ஆம் வட்டாரம் வேலணை கிழக்கு,இ.மயூரன்-கட்டை வேலி கரவெட்டி கிழக்கு,ச.பிரிய தர்சினி-பண் ணையம் பதி பருத்தித்துறை,தி.மேரி வினோஜா -7 ஆம் வட்டாரம் நெடுந்தீவு ,தனேஸ்ரூபா-கொட்டடி யாழ்ப்பாணம். (ச-6)

## மூதூரில் இருவர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பிரதேசத்திலுள்ள பாரதிபுரத்தில் நேற்றுமுன்தினம்இரவு குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். விவசாயியான கந்தையா கோவிந்தன் (வயது 41) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நபர் தனது தேவையின் நிமித்தம் வெளியே சென்று வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இவர் இரவு 8.30 மணியளவில் பாரதிபுரம் தமிழ் வித்தியாலயத்திற்கு அருகாமையில் எதிர் கொண்ட அடையாளம் தெரியாத துப்பாக்கி நபர்கள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதே வேளை மூதூர் தங்கநகரிலும் நேற்று முன்தினம் இரவு செல்லத்துரை நல்லதம்பி (வயது 52) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச-5)

## இளைஞர் குழுக்களிடையே கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பகுதியில் நேற்றிரவு இளைஞர்கள் இடையே ஏற்பட்ட கோஷ்டி மோதல் படையினரின் தலையீட்டால் தடுக்கப்பட்டது.

இளைஞர்களிடையே கோஷ்டி மோதல் இடம் பெறும் செய்தியை அறிந்த படையினர் சம்பவ இடத்திற்கு சென்றதுடன் நிலைமையையும் சுமுகமாக்கினர்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் இரும்பு ஆயுதங்களுடன் நின்ற மூன்று இளைஞர்களை கந்தர்மடம் முகாமைச் சேர்ந்த படையினர் பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைத் தேடிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-1)

## க.பொ.த.சா/த பெறுபேறு ஏப். 8இல் வெளியீடு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்டப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அது நிறைவடைந்ததும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்படுமெனவும் அவர் கூறினார். (ச)

## தந்தை செல்வாவின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடை பெறவுள்ளது. (ச-6)

## மாணவர்களின் விபரம் திரட்டல்

கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வருகை தந்த நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்களின் தகவல்களை திரட்டுமாறு பரீட்சைகள் திணைக்களம் உரியதரப்புகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார். தகவல் திரட்டும் நடவடிக்கை யை துரிதமாக நிறைவு செய்யு மாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-3)


**விற்பனைக்கு**

**கடை நிலை, கதவு (மரம்)**

**விற்பனைக்கு உண்டு**

தொடர்பு:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:2222573 (C-2234)


# வன்னியில் இடம் பெறும் யுத்தத்தால் அப்பாவிப் பொது மக்களுக்கே பாதிப்பு!

## சிங்கள நாளேட்டுக்கு ஸ்ரீகாந்தா எம்.பி.பேட்டி



வன்னிப் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக இதுவரை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 15ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனரெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

பிரபல சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வன்னியில் தற்போது இடம் பெற்று வரும் யுத்தம் காரணமாக அப்பாவித் தமிழ் மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தில் சிக்கிக் காயமடைந்தவர்களில் 500க்கும் மேற்பட்டோர் உரிய மருத்துவ வசதிகள் இன்றி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான உயிரிழப்புகளுக்கு எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதல்களே காரணமாகின்றன வன்னிப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் எறிகணை வீச்சுக்களையும் குண்டுத் தாக்குதலைகளையும் உடன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள 13 இடைத்தங்கல் முகாம்களில் பல்வேறு அசௌகரியங்கள் நிலவுவதாகவும் அகதிகள் சிறைக் கைதிகள் போன்று அங்கு அடைக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாவற்றுக்கும் முதலாவதாக யுத்தம் நிறுத்தப்பட்டால் இலங்கையின் அடிப்படை பிரச்சினைக்கு இலகுவில் தீர்வுகண்டு அதன் பின்னர் ஐக்கிய இலங்கையை ஒன்றிணைந்து கட்டியெழுப்பலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்,முஸ்லிம்,சிங்கள பேதமன்றி வாழ்வதையே நாங்களும் விரும்புகிறோம் எனவும் உண்மை நிலைகளை அறிவதற்கு ஊடகவியலாளர்கள் அனைத்து பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளதாக அந்த செய்தித்தாள் தெரிவிக்கின்றது. (எ

# உள்ளூர் உ.கிழங்கை கொள்வனவு செய்ய யாழ்.வர்த்தகர்கள் முன்வர வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போது உருளைக் கிழங்கு போதியளவு உற்பத்தி செய்யப்படுவதால் யாழ்.வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து உருளைக்கிழங்கை எடுத்து வருவதை முழுமையாகத் தவிர்க்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

உள்ளூரில் தரமான உருளைக்கிழங்கு போதியளவு உற்பத்தி செய்யப்படுவதால் வர்த்தகர்கள் மற்றும் உணவுச் சாலை உரிமையாளர்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து உருளைக்கிழங்கை மொத்தமாகச் கொள்வனவு செய்து அவர்களின் முயற்சிக்கு ஊக்கமளிக்குமாறும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ந-5)



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சுடுதண்ணீர் போத்தல்கள் இலங்கை மின்சார சபையின் வடமாகாண நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தால் வழங்கப்பட்டது.இந் நிகழ்வில் இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம், யாழ். அரச அதிபர் க.கணேஷிடம் சுடுதண்ணீர்ப் போத்தல்களை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

## அஞ்சல் அறிமுக அட்டை ஒரேநாளில் விநியோகம்

யாழ்.அஞ்சல் திணைக்களம் பாடசாலை மாணவர்களுக்கு உடனடியாக ஒரே நாளில் அஞ்சல் அறிமுக அட்டைகளை வழங்கியுள்ளது உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை அக்கல்லூரி அதிபரின் ஏற்பாட்டில் இச்சேவை நடைபெற்றது.

இவ்வருடம் க.பொ.த.சா/தப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கும் வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கும் அஞ்சல் அறிமுக அட்டை வழங்கப்பட்டது.

இச்சேவையின் போது குடும்ப பாடசாலைகளான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலை, வல்வை சிதம்பரா க் கல்லூரி,வல்வை சிவகுரு வித்தியாலயம், வல்வெட்டி இ.த.க. பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி,கரணவாய் மகாவித்தியாலயம்,பொலிகண்டி இ.த.க.பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் ஒரே நாளில் அஞ்சல் அறிமுக அட்டைகளை பெற்றுக்கொண்டனர். இச்சேவையின் போது வடமாகாண பிரதி தபால்மா அதிபர் வி.குமரகுரு,பதவிநிலை உத்தியோகத்தர் ஏ.சுந்தரலிங்கம்,பிராந்திய நிர்வாக உத் தியோகத்தர் கே.புஷ்பநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-10)


**தொலைந்து விட்டது**

நீர்வேலி வடக்கு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த குமாரசாமி ஐயர் தியாகராஜ சர்மா என்பவரின் 430570650 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் இராணுவ அடையாள அட்டை என்பன நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவிலடியில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். (2466)

# இன்று ஒரு தகவல்

## இடது கைப்பழக்கம்

" அம்மா என்னைத் தூக்குங்கள்" என்று குழந்தை கத்துகிறது.

உடனே அம்மா அந்தக் குழந்தையைத் தூக்கி இடுப்பில் வைக்கிறார்.

எந்தப் பக்கமாக வைத்திருக்கிறார்?

இடது பக்கம்.

பொதுவாக குழந்தையைத் தூக்குபவர்கள் யாரும் வலதுபக்க இடுப்பில் வைத்திருப்பதில்லை.

விபரம் தெரியாத ஆண்கள் சிலர் அப்படித் தூக்கி வைத்துக்கொண்டு அலைவதுண்டு. நீங்களும் பார்த்திருக்கலாம்.இது ஒரு பக்கம் இருந்தாலும்... பொதுவாக குழந்தைகளை இடதுபக்க இடுப்பில் வைத்துக் கொள்ளும் பழக்கம் தான் இருந்து வந்திருக்கிறது.

இதற்கு ஆய்வாளர்கள் என்னகாரணம் சொல்கிறார்கள் தெரியுமா?

அப்படி இருந்தால் தான் குழந்தை சொல்வதை, நினைப்பதை தாயினால் நன்றாக உணர முடிகிறதாம். குறிப்பாக காதின் தலைமையம் இருப்பது வலது பக்கம் தான்.

அதனால் தாய்,குழந்தைக்குப் பதில் சொல்லவோ, அது என்ன கேட்கிறது என்பதைப் புரிந்து கொண்டு நடந்து கொள்ளவோ வசதியாக இருக்கும் என்கிறார்கள்.

இதனால் தாய்க்கும் குழந்தைக்கும் நெருக்கம் அதிகமாகிறது. குழந்தைக்கும் பாதுகாப்பு அதிகம். அது மட்டுமல்ல. ஒரு தாய்,தன் குழந்தையை இடுப்பில் சுமப்பதால் அவன் நினைப்பதை, அவளுடைய இதயத் துடிப்பை குழந்தை உணர்கிறதாம்.

நம் முன்னோர்கள் நெடுங்காலமாகவே வலது கையை பாவிக்க ஆரம்பித்து விட்டார்களாம். அவர்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் எல்லாம் வலது பக்கமாகத் தான் தீட்டப்பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் இருந்தும் இன்றைக்கு நம்மில் பத்தில் ஒருவருக்கு இடது கைப்பழக்கம்இருக்கிறது என்கிறார்கள் நிபுணர்கள்.ஆனாலும் இரண்டு கைகளும் ஒற்றுமையாக இருக்கத்தான் முயற்சி செய்கிறதாம்.

வலது கைப் பழக்கம் உள்ளவர்கள் பேச, எழுத செயல்படுத்தும் தலைமையகம் தலையின் பின்புறம் பிடரியில் இருக்கிறது.

இடது கைப்பழக்கம் உள்ளவர்களுக்கு மூளையின் இரண்டு பக்கங்களிலும் தலைமையகம் இருக்கிறது.

எத்தனையோ மேதைகள் இடது கைப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அமெரிக்க மேதை பெஞ்சமின் பிராங்ளின், இத்தாலிய ஓவியர் லியானார்டோ டாவின்சி போன்றவர்களும் இடது கைப்பழக்கம் உள்ளவர்கள் தான்.

காலங்காலமாக இயல்பாகவே இடது கைப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது.

உலகம் இடது பக்கமாகத்தான் சுற்றுகிறது. வானத்திலிருக்கும் வெள்ளி வீதி, அணுவில் இருக்கும் துணுக்குகள் கூட இடது பக்கமாகத் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு செய்திகள் இடது கைக்கு ஆதாரமாக இருக்கும் போது அது எப்படி வலது கையிடம் ஏமாந்தது என்ற இரகசியம் இன்னும் யாருக்கும் புரியவில்லை. இதுசம்பந்தமாக ஆராய்ச்சி செய்தவர்களுக்கு கூட இது இன்னமும் ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கிறது.

இப்படி இடது கை ஒதுங்கிக் கொண்டதால் இப்பொழுதெல்லாம் வலது கைக்குத்தான் மரியாதை அதிகம்.

ஒருவர் இடது கையில் கட்டுப் போட்டுக் கொண்டு வந்தார்.

" கையில் என்னப்பா கட்டு?" என்று விசாரித்தார் இன்னொருவர்.

"ஒரு இயந்திரத்தை பிரித்து திருத்திக் கொண்டிருந்தேன் மறுபடி அதை ஓடவிட்டு பார்க்கும் போது இடது கைவிரல் மாட்டிக் கொண்டது. அதுதான் கட்டு" என்றான் அவன்.

" நல்ல வேளை வலது கை மாட்டியிருந்தால் உன்னால் சாப்பிடக்கூட கஷ்டமாக போயிருக்கும்" என்றார் அவர்.

அதற்கு இவர், " முதலில் வலது கைதான் மாட்டிக் கொள்ள இருந்தது. நான் தான் உடனே பத்தி சாலித்த னமாக அதை இழுத்துக் கொண்டு இடது கையை கொடுத் தேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வயதெல்லையின்றி குறைந்த செலவில் இலங்கையில் உயர்கல்வியை கற்றுக் கொள்ளலாம்

## உயர்கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்வியை வயதெல்லையின்றி அனைவரும் குறைந்த செலவில் இலங்கையில் பெற்றுக் கொள்வது தொடர்பாக சார்க் நாடுகளின் உயர்கல்வி அமைச்சர்கள் கலந்துரையாடி உள்ளதாக உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

சார்க் நாடுகளின் உயர் கல்வி அமைச்சர்களின் மாநாடு கடந்த 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன் போது சார்க் நாட்டு உயர் கல்வி அமைச்சர்கள் கலந் துரையாடியவிடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவிக் கும் முகமாக நேற்றுமுன்தினம் உயர் கல்வி அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில்,

நமது நாட்டின் கல்வித் திட்டத் தின் ஒரு எல்லைக்குட்பட்டதாக உள் ளது. எமது கல்வி திட்டத்தை ஏனைய நாடுகளுடன்ஒப்பீட்டு பார்க்கும் பொழுது வெளிநாடுகளில் உள்ள கல்வித் திட்டத்தில் உயர் கல்வியை எந்த வயதினரும் தகுதி இருப்பின் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளலாம் ஆனால் , எமது கல்வித் திட்டத்தில் அப்படி ஒரு முறை இல்லை. இதனை எமது கல்வித் திட்டத்தில் கொண்டு வர திட்டமிட்டுள்ளோம் இம்மா நாட்டில் உயர் கல்வித் திட்டத்தின் கீழ் பல விடயங்களை மக்களிடம் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளோம்.

எமது நாட்டில் பல்கலைக்கழ கங்களை எடுத்து கொண்டால் நூற் றுக்கு 51வீதம்பெண்கள் உள் ளனர். இதனடிப்படையில் எமது கல்வித் திட்டத்தில் சமத்துவம் என்பது உள் ளது. இது எமக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும்.

இது தவிர வலய நாடுகளை எடுத்துக் கொண்டால் பின் தங்கிய பிரதேசத் தை சேர்ந்த வறுமையான நிலையில் வாழ்பவர்கள் ,நோய்வாய்ப்பட்டவர்கள் என இரு பகுதியினர் இருக்கின்றனர்.எமது இப் புதிய உயர் கல்வித் திட்டத்தின் மூலம் இவ் வாறான பின் தங்கிய பிரதேசங் களில் வாழும் மக்களுக்கும் உயர் கல்வி வாய்ப்பினை வழங்க முடியும்.

உயர் கல்வியின்கீழ் பரிசோதனை, பயிற்சிஅபிவிருத்தி என் பன பற்றி பேசப்பட்டது.நாம் தற் போது 1949ஆம்ஆண்டு அமுல் படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தையே பின்பற்றி வருகிறோம். இது 21 ஆம் நூற்றாண்டு எனவே 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் எமது உயர் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இதன் மூலம் அபிவிருத்தியு டைய ஒரு மாற்றத்தை இந்த சமூகத்தில் உருவாக்க முடியும் இது தவிர அனைத்துமக்களும் கற்கும் வகை யில் குறைந்த செலவில் கல்வியைத் தொடர வழி செய்வதே எமது நோக் கம்.

டொனி பிளேயர்,பில்கிளின்டன் , ஒபாமா போன்ற தலைவர்களை பார்த்தீர்களானால் இவர்கள் அடிக்கடி கல்வியைப் பற்றியே தாம் செல்லும் கூட்டங்களில் பேசுகின்றனர். அவர்கள் கல்வி அபிவிருத்தி அடைந்து மாற்றங்கள் பெறவேண்டு மென வலியுறுத்துகின்றனர்.

இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது எமது கல்வித் திட்டம் நூற்றுக்கு 55சதவீதத்திலேயே உள் ளது. இதனை 60 லிருந்து 65 வீதத் திற்கு உயர்த்துவதே எமது நோக்கம்.

எமது நாட்டில் பலவெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் உள்ளன. பணமுள்ளவர்கள் பல ஆயிரங் களை செலவுசெய்து கற்கின்றனர்.கற்றபின் கிடைக்கும் பட்டத்தை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் செய்கிறார்கள்.

இவ்வாறு வருடத்திற்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையான மாணவர்கள் செல்கின்றனர்.இப்படி செல்லும் மாணவர் ஒருவர் 61மில்லியன் யூ.எஸ் டொலர் பணத்தை வைப்பில் வைத்து செல்ல வேண் டும். இதனை பணக்கார வர்க்கத்தினர் செய்வர். சாதாரண மக்கள்எங்கே போவார்கள்,அவ்வாறானவர்களின் உயர்கல்வி எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவே இத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

சார்க் நாடுகளின் அடுத்த உயர் கல்வி அமைச்சின் மாநாடு இந்தியாவில் இடம்பெறும். இதில்உயர் கல்வித் திட்டம் தொடர்பான ஆய்வு இடம்பெறும் என்றார். (5)



சைவ பரிபாலன சபையால் புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் , கீழ்ப் பிரிவில் முதலிடம் பெற்ற யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி அருந்ததி சற்குணானந்தன் சர்மாவுக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் க.புஷ்பநாதன் தங்கப்பதக்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

**30.03.2009**

*(பங்குனி 17, திங்கட்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 5.07மணிவரை*
*கார்த்திகை பின்னிரவு 3.25மணிவரை*
*இராகுகாலம் 7.42 - 9.12 மணிவரை*
*சுபநேரம் 12.12- 1.42மணிவரை*
*கரவெட்டி யார்க்கரு பத்திரகாளி,*காரைநகர் சிவன் கோயில், தெல்லிப்பளை மாரியம்மை, நல்லூர் நல்லைநாதன், கோண்டாவில் கிழக்கு நாகபூசணி கொடியேற்றம், சக்தி கணபதி சதுர்த்தி விரதம், கார்த்திகை விரதம், மூன்றாவது பங்குனித்திங்கள்

| | |
|---|---|
| மேடம் | சயன சுகக்குறைவு, வீண் வார்த்தை, காரிய தாமதம், தன விரயம். |
| இடபம் | தெய்வ சிந்தை, ஜனவசியம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி பலிதம். |
| மிதுனம் | பிதா சிந்தை,கோபப்படுதல், காரிய அலைச்சல், சுப செலவு. |
| கடகம் | தொழில் நன்மை, உறவினர் வருகை, கீர்த்தி, காரிய அனுகூலம். |
| சிங்கம் | அதிகாரம், செய்தொழில் விருத்தி, உற்சாகம்,முயற்சிகை கூடும். |
| கன்னி | உடல் உழைப்பு, வீண் பயம், பிரயாணம்,ஆரோக்கியக் குறைவு. |
| துலாம் | எதிர் பாராத அச்சம்,போசன சுகம்,பணக்குறைவு, அப கீர்த்தி. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், களஸ்திர சுகம், தனவருவாய், திடீர் பயணம். |
| தனுசு | சுக வாழ்வு, தொழில் நன்மை, சத்துரு ஜெயம், பொருள் சேர்க்கை. |
| மகரம் | சகோதரர்உதவி,வியாபார நன்மை, தன விரயம், வேலைச் சுமை. |
| கும்பம் | கல்வியில் ஆர்வம், சுபசெலவு, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | இனிய சம்பவம்,அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 60-80 | 70-90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | - | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 30 | 40 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 15 | 30 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 |
| பாகற்காய் | 60 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 |
| பயிற்றங்காய் | 15 | 20 |
| லீக்ஸ் | 140 | 140 |
| போஞ்சி | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30-35 |

# யாழ்.பல்கலையில் பொதுநிர்வாகம்; பண்பாட்டியல் முதுகலைமாணி பட்டப்படிப்பிற்குத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் 2009/2010 கல்வியாண்டில் பொது நிர்வாகத்தில் (பிரிவு II ) முதுகலைமாணிப் பட்டப்படிப்பிற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

கணபதிப்பிள்ளை பசுபதி ஆனந்தநடேசன், அன்ரோ அமலவளன் ஆனந்தராஜா, சுவாம்பிள்ளை அன்ரனிராசன், தேவேந்தினி பாபு, டாக்டர் சபாரட்ணம் கணேசன், செல்வி. குணாஜினி கோபால கிருஷ்ணன், செல்வி செந்தீஸ்வரி ஐயாத்துரை, திருமதி லிற்வின் வேலாஜினி ஜெயதிலக், ராஜசுந்தரம் ஜோய் இன்பராஜா, கமலசிங்கம் கஜீரன், பஞ்சராஜா கஜேந்திரன், ஆறுமுகம் கிரிதரன், பாலகிருஷ்ணன் கிருஷ்ணஜோதி, செல்வி சுஜாதா குமாரசாமி, ஞானசேகரம்பிள்ளை லோகநாதன், ஈஸ்வரநந்தன் மகேந்திரன், தவசெல்வம் முகுந்தன், திருமதி ராசலெட்சுமி முகுந்தன், ராஜரட்ணம் முகுந்தன், செல்வி சுகந்தி நாகராஜா, நாகேந்திரன் நவநீதன், மணிவாசகன் நிமலன், அரியரட்ணம் நிதர்சன், மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன், நடராஜா பிரபாகரன், கேதீஸ்வரநாதன் பிரபாகரன்.

செல்லத்துரை பிரசாத், கதிர்காமத்தம்பி பிரதீபன், திருமதி தாரகா பிறேம்ஆனந்த், செல்வி மோகனகலா ராஜேந்திரம் , சண்முகலிங்கம் சதீஸ், கிருஷ்ண்ராஜா சதீஸ், சிவபாதசுந்தரம் சத்தியசீலன், செல்வி கலைமதி செல்லத்துரை, குமரகுருநாதன் சாந்தகுமார், செல்வி சிவகௌரி சிவகுருநாதன், சங்கரபிள்ளை சிவகுமார், கனகராஜா சிவகுமாரன், சிவநேசன் சிவநாதன், திருமதி அனுஷா சிவனேஸ்வரன், செல்வி சசீலா சிவசுப்பிரமணியம், அம்பலவாணர் சோதிநாதன், சோமசுந்தரம் சுஜிர்தன், சந்திரசேகரம் சுரேஷ்குமார், இராசையா சுரேஷ்குமார், பாலசுப்பிரமணியம் சுதாகரன், நடராஜா சுதர்சன், சிவபாதம் தனேஸ்வரன், செல்வி தயாளினி தங்கராஜா, சிவபாதம் திருச்செந்தூரன், நடராஜா திருலிங்கநாதன், திருமதி சாதனா வைகுந்தவாசன், செல்வி டுஷாந்தினி யோகரட்ணம்.

*பண்பாட்டியல் முதுகலைமாணிப் பட்டப் படிப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம்,*

தவராஜா அருள்குமரன், சாமுவேல் டேவிட் ராஜ், அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ், ரவீந்திரநாதன் ஜெய்கர், அம்பலவாணர் ஜெயந்தன், செல்வி முருகசுந்தரி கனகசுந்தரம், செல்வி சியாமினி கந்தையா, நாகேஸ்வரன் கிரிசங்கர், ரட்ணராஜா கிருஷ்ணகுமார், தர்மராஜா மகிந்தன், செல்வி சுஜாதா மகாலிங்கம், சின்னத்தம்பி நிகால் சுரேன்குமார், துரைராஜா நிலோஜன், மணிவாசகன் நிமலன், திருமதி நிஷாந்தினி நித்திலவர்ணன், சிவகணேசன் பேரின்பசிவம், திருமதி தனுஷா பேரின்பசிவம், சுந்தரலிங்கம் பிரசாந்தன், துரைராஜா ராமதாஸ், திருமதி குகபூஷணி ராமலிங்கம், நற்குணராஜா ரமணன், செல்வி அன்பரசி ரட்ணசிங்கம், மயில்வாகனம் சசிகரன், திருமதி திவ்யா சதீஸ்குமார், வேலுப்பிள்ளை செல்வகுமார்.

நந்தகோபால் செல்வகுமரன், செல்வி கலைவள்ளி செல்வமாணிக்கம், செல்வி வத்சலா செல்வநாயகம், செல்வி ரேணுகா சின்னராஜா, செல்வி செல்வகுமாரி சிவலிங்கம், செல்வி சிவஞானவதி சிவமூர்த்தி, செல்வி சுபாசினி சிவநாதன், செல்வி சுமிதா சிவநேசன்.

செல்வி சுஜிந்தா சிவபாதம், ரகுநாதன் சிவபாதசேகரம், செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்கள், செல்வி இமையாள் ஸ்ரீகரன், கந்தையா ஸ்ரீநந்தகோபன், திருமதி கிறிஸ்ரின் தர்சினி தர்மதாஸ், சௌந்திஸ் தர்மதாஸ், பொன்னுத்துரை தயாளன், பூபாலன் தேவராசா, செல்லையா திருக்குமரன், நடராஜா திருக்குமரன், செல்வி கார்த்திகேயினி திருநாவுக்கரசு, திருமதி கஜாநந்தினி வரதலோகன், சிங்கராஜா வசந்தரூபன், திருமதி சுகுணாளினி விஜயரட்ணம், பவிலுப்பிள்ளை வின்சென்ட், வரதராஜா வித்யாபரன். (ந-6)

## மஹோற்சவம்

(நல்லூர்)

யா/நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறமும், 7ஆம் திகதி காலை 9.15 மணிக்கு இரதோற்சவமும், 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (5-4)

♦♦♦

(சுழிபுரம்)

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது. இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 6 ஆம்திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 7 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் இடம் பெறவுள்ளது. (5-4)

## சண்டிலிப்பாய் இந்து முதலாமிடம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலைகளைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

தூய்மையான சிறந்த சுற்றாடல் என்ற தொனிப்பொருளில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் இப்போட்டியில் இதற்கு முன்னர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் பத்தரமுல்லையில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (5)




## யாழ்.செய்திகள்

### காரைநகர் வீதி புனரமைக்கப்படுகிறது

(பொன்னாலை)

காரைநகர் பிரதான வீதி மற்றும் 9 கண் பாலம் ஆகிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் அரம்பிக்கப்பட்டுள்ளன.

பல மில்லியன் ரூபா செலவில் இடம் பெற்று வரும் மேற்படி வீதிகளின் புனரைப்பு வேலைகள் இவ் வருட இறுதிக்குள் முடிவடைந்து விடுமெனத் தெரிவித்துள்ள யாழ். அரச அதிபர் க.கணேஷ் சீரான பொதுப் போக்குவரத்துக்கு வழி வகை செய்யப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (5-49)

### வீதிப் போக்குவரத்து ஒழுங்கும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

கொக்குவில், கோண்டாவில் லயன்ஸ் கழகங்களும் யாழ். மணிபல்லவ கழகமும் இணைந்து நடாத்தும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் இன்றும் நாளையும் நண்டபெறவுள்ளது.

இதில் இன்று காலை 7.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்-பலாலி வீதி கோண்டாவில் கிழக்கில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கும், நாளை மாலை 3 மணிக்கு கண் பரிசோதித்து மூக்குக் கண்ணாடி வழங்கலும் இடம்பெறவுள்ளது. (5-4)

## யாழ்.பாடசாலைகளிலுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

### வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலுள்ள அதிபர் வெற்றிடங்களை தகுதிகளின் பிரகாரம் நிரப்புமாறு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ப்தில் அதிபரை நியமிக்கும் நடவடிக்கை அண்மையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு நிறுத்தியிருந்தது.

அத்துடன் தற்போது இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு கல்வியமைச்சால் நியமனம் வழங்கப்பட்டவர்களை அதிபர் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்க வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தது.

எனினும் அதிபர் தரம் 2-II இற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டதில் குறைபாடுள்ளது எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டமையால் வழங்கப்பட்ட நியமனங்களை அவ் வழக்கின் தீர்ப்பு வரும் வரை இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சு சகல மாகாணக் கல்வி அமைச்சுக்களுக்கும் அறிவித்தது.

இந்நிலையிலேயே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிபர் வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு தகுதியானவர்களுக்கு பொறுப்புக்களை வழங்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (5)

## நயினாதீவு இறங்குதுறை , வீதிகள் புனரமைப்புக்கு 1.57 கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

நயினாதீவு இறங்குதுறை உட்பட அங்குள்ள வீதிகளைப் புனரமைக்க ஒரு கோடி 57 இலட்சம் ரூபா நிதியை வடமாகாண உட் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்நிதியின் மூலம் நயினாதீவு இறங்குதுறை உட்பட அங்குள்ள வீதிகள் 4 மாத காலத்திற்குள் புனரமைக்கப்படுமென வீதி அவிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

நயினாதீவு இறங்குதுறை சுமார் 50 வருடங்களாக புனரமைக்கப்படாமலிருப்பதன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர் என சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவித்ததாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய ஆனி மாதம் நடைபெறவுள்ள நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவத்திற்கு முன்பாக புனரமைக்கபடுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)





வல்வெட்டித்துறை றோ.க.பாடசாலையும் வல்வை அமெரிக்க மிசன் பாடசாலையும் இணைந்து நடத்திய தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.சிவரஞ்சினி, றோ.க.பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர் எஸ்.தில்லையம்பதி ஆகியோர் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், மாணவர்கள், விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## விஷேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சக்தி கணபதி சதுர்த்தியும் கார்த்திகை விரதமும் சேர்ந்து வருவதால் சிறப்பு மிகு அபிஷேகமும் விநாயகர் வேலவர் உள்வீதி வலம் வருதலும் நடைபெறவுள்ளது. (4)

# இலங்கையில் தமிழர் 108

## ஹெளவரும் தமிழரும்
### உறுதிபெற்ற இனக்குழுக்கள்
### .900-1070

இந் நகரங்களில் தமிழ்நாட்டில் போல, விழாக்களும் பண்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவை அங்கிருந்த கோயில்களில் நடைபெற்றன. மாதோட்டமான ராஜராஜபுரத்தில் இருந்த ராஜராஜேஸ்வரத்தில் வைகாசி விசாகத்தின் போது ஏழு நாட்கள் விழாவெடுத்துத் தீர்த்தம் ஆடப்பட்டது.

இத்தகைய விழாக்களின்போது நடன நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் நடை பெற்றிருக்கலாம். சோழராட்சிக்குச் சிறிது பின் பாகக் கந்தளாயிலிருந்த விஜயராஜ ஈஸ்வரத்தில் நடனமாதர் இருந்தனர். பொலநறுவையில் சோழர் ஆட்சியின் போதே கோயில்களில் தேவரடியார் என்ற நடனமாதர் இருந்தனர்.

### வணிக கணங்கள்

சோழராட்சியின் போது தென்னிந்திய வணிக கணத்தினர் செல்வாக்குடன் விளங்கியிருப்பர். அவர்களுள் அஞ்ஞாற்றுவர் என்போர் முக்கியமானவர்கள். இவர்கள் தொடர்ந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரைசெல்வாக்குப் பெற்றிருந்தது, பல இடங்களில் எறிவீர பட்டணம் என்ற நிறுவனங்களையும் வர்த்தக மையங்களையும் நிறுவினர்.

சோழருடைய அரசியல் ஆதிக்க வளர்ச்சிக்குச் சமனாகத் தென்னிந்திய வணிக கணகங்களின் நடவடிக்கைகள் இக்காலத்தில் அதிகரித்தன.

இக் கணங்களுடைய கல்வெட்டுக்கள் கிடைத்தாலும், அவற்றின் சிக்கலான அமைப்புப் பற்றியும் அவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் தெளிவான விபரங்கள் பெறுவது கடினமாகும்.

இக்காலத்து வணிக கணங்களுள் அஞ்ஞாற்றுவர் என்ற பெயரால் பொதுவாக அறியப்படுவோர் பரவலாகத் தென்னாசியாவிலும் தென் கிழக்காசியாவிலும் வர்த்தகம் மட்டுமன்றி வேறும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இவர்கள் அய்யப்பொழில், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நானாதேசி மற்றும் வீர வலஞ்சியர், போன்ற பல்வகைப் பெயர்களால் அறியப்பட்டனர். இவர்களுடன் வர்த்தகம் அல்லாத பிற தொழில்களில் ஈடுபட்டோரும் சேர்ந்து இயங்கினர்.

இலங்கையில் உள்நாட்டு வர்த்தகத்திலும் வெளிநாட்டு வர்த்தகத்திலும் அஞ்ஞாற்றுவரும் அவர்களுடன் கூடிய பிற குழுவினரும் மிகுந்த ஆதிக்கத்தைப் பெற்றிருந்தனர். நாட்டில் இருந்த முக்கியமான வர்த்தக நகரங்கள் பெரும்பாலும் இவர்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன.

இவர்கள் முக்கிய நகர மையங்களில் எறிவீர பட்டணம் என்ற பெயரைக் கொண்ட நிலையங்களை நிறுவினர். ஒரு குறிப்பிட்ட நகர மையத்தை எறிவீர பட்டணமாக அவர்கள் பிரகடனப்படுத்திய போது எத்தகைய அந்தஸ்தைப் பெற்று எவ்வாறு அது இயங்கியது என்பதை அறியப் போதிய சான்றில்லை.

அஞ்ஞாற்றுவர் விட்டுச்சென்ற கல்வெட்டுக்கள் இலங்கையில் பல இடங்களில் கிடைத்துள்ளன.

இவை கூடுதலாக வடகிழக்குப் பகுதி யில் காணப்படுவது கவனிக்கத்தக்கது. இக்கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்கள்: அனுராதபுரம்,பொலநறுவை,பதவியா, வாஹல் கட, விஹாரேஹின்ன, புதுமுத்தாவ, இலக் கட்டு எப, அதரகல்ல, தெற்றியாமுல்ல, மணற்கேணி மற்றும் ஆன உளுந்தாவ ஆகியவையாம்.

பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் மேற்கூறிய இடங்களில் வர்த்தக நகர மையங்கள் இருந்தன. பல்வேறு இனக் குழுக்களைச் சேர்ந்தோர், சிறப்பாகத் தெலுங்கர், கேரளர்,கன்னடர் மற்றும் தமிழர், ஒன்று சேர்க்கப்பட்டனர். இவ்வாறு இவர்கள் பல்லினத் தன்மை கொண்டிருந்தாலும் தமிழ் மொழியையே இலங்கையில் தங்கள் ஆவணங்களில் பயன்படுத்தினர். இவர்களுள் ஒரு பிரிவினர் இலங்கையில் தங்கள் வர்த்தகத்தை நன்கு நிறுவி, தம்மைத் தென்னிலங்கை வலஞ்சியர் என்று வர்ணித்துத் தென்னிந்தியாவில் பல்வகை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அஞ்ஞாற்றுவரிலிருந்து தெளிவாக வேறுபட்ட வணிக கணங்களாக இயங்கி யோருள் குறிப்பிடத்தக்கவர்கள் மணிக் கிராமம் மற்றும் அஞ்சுவண்ணம் என்ற கணங்களைச் சேர்ந்தோராவர்.

இவர்களுள் கேரளத்தில் தோற்றம் பெற்ற மணிக் கிராமத்தவர் சோழர் ஆட்சிக்கு முன்னரே இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது.

இலங்கை முஸ்லிம்களுடைய வரலாற்றில் முக்கியத்துவமுடைய அஞ்சு வண்ணத்து வர்த்தகர் எப்பொழுது இலங்கைக்கு வந்தனர் என்பதை அறிவது கடினம். இவர்கள் மேற்காசிய வர்த்தகர்களின் வழித்தோன்றல்கள். பாரசீக ( ஈரானிய) வர்த்தகர்களும் அராபிய வர்த்தகர்களும் அஞ்சு வண்ணத்தில் அடங்கினர் எனலாம்.

இஸ்லாமியர் மட்டுமின்றி யூதர்களும் இவர்களிடையே காணப்பட்டனர் என்று கொள்ளலாம். மேற்காசியாவில் இருந்து வந்த இவர்களுடைய குடியிருப்புக்கள் கேரளத்தின் கரையோரத்தில் முதலில் நிறுவப்பட்டு பின்னர் பரவின எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து இவர்களுடைய வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

அஞ்சுவண்ணம் என்ற பெயர் பாரசீகச் சொல்லாகிய ஹஞ்ஜமான என்ற சொல்லிருந்து பெறப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் அஞ்சு வண்ணத்தைச் சேர்ந்தோர் சோழராட்சியின் போது இருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. பதினோராம் நூற்றாண்டில் இவர்கள் மாதோட்டத்தில் இருந்தமை பற்றிய செய்தி ஆந்திரத்து விசாகபட்டினத்தில் கிடைத்த தெலுங்குக் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகின்றது. இலங்கையின் கரையோரத்தில் பின்னர் இருந்த முஸ்லிம் குடியிருப்புக்கள் இந்த அஞ்சு வண்ணத்தவர் குடியிருப்புக்களுடன் தொடங்கியிருக்கலாம். (தொடரும்)

வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 28

வாழ்க்கையில் முன்னேற அமெரிக்கருக்கு இருக்கும் வாய்ப்புகள் எதுவும் இந்தோனேஷியாவில் கிடையாது என்பதை உணர்ந்து விட்டாள். கணவருக்கும் தனக்கும் ஏற்படும் கருத்து வேற்றுமை விரிவடைந்து கொண்டே சென்றது.

ஒபாமாவின் கல்வியில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினாள். பணம் இல்லாததால் அவனை ஏனைய வெளிநாட்டு பெற்றோர்கள் போன்று சர்வதேசப் பாடசாலைகளில் சேர்ந்து படிக்க வைக்கமுடியவில்லை.

ஆகையினால் இந்தோனேஷிய பள்ளியில் தான் அவன் படித்தான். அமெரிக் காவிலிருந்து தபால் மூலக் கல்விக்கான பாடங்களைத் தருவித்து தானே அவனுக்குப் பாடங்களை நடத்தினாள்.

காலை நான்கு மணிக்கே ஒபாமாவுக்கு காலை உணவை ஊட்டிய கையோடு தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பாள்.

அதன்பிறகு அவனை பள்ளிக்கு அனுப்பிய பின் தன் பணிக்குச் செல்வாள். இந்தக் கெடுபிடியிலிருந்து தப்புவதற்கு மகன் வயிற்று வலி, கண் வலி என்றெல்லாம் சாக்குப்போக்கு கூறுவான். அதற்கு தாய் "நான் என்ன உல்லாசமாக பொழுது போக்கவா இங்கே வந்துள்ளேன்" என்பாள்.

பாட்டியின் குரல் எப்போதும் ஒபாமாவைப் பற்றியும் அவனின் பாதுகாப்புப் பற்றியும் தான் உரத்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

ஒருநாள் அவன் வீடு வந்து சேரும்போது நன்றாக இருட்டிவிட்டது. முற்றத்தில் அயலவர்களின் கூட்டம் ஒபாமாவைத் தேட ஆயத்தமாகியது.

அவனது முன்னம் கையில் கட்டுப் போடப்பட்டிருந்தது. அம்மா பயந்தே போய்விட்டாள். முட்கம்பிவேலி மேல் விழுந்ததில் கையில் காயம். இரத்தம் ஓடுகிறது. சதை வெளியில் தெரிகிறது.

அயலவரிடம் கார் இருந்தபடியால் அவரைக் கெஞ்சிக் கேட்டு மகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றாள். அங்கு மின்னொளி அணைக்கப்பட்டு இருந்தது.



ஹவாயில் படித்துக்கொண்டிருந்த போது சக மாணவர்களுடன் ஒபாமா

எங்கு தேடியும் டாக்டர்களைக் காணவில்லை.

சிலர் டொமினோ விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் விசாரித்ததில் தாங்கள்தான் வைத்தியர்கள் என்றார்கள். தங்கள் விளையாட்டை முடித்த பின்தான் ஒபாமாவுக்கு இருபது இழைபோட்டு மருந்து தந்தார்கள். இன்னும் அதன் தழும்பு அவரின் கையில் இருந்து அலங்கோலப்படுத்துகிறது.

இச் சோதனைகள் அவளின் மகனையிட்டு அவள் வைத்துள்ள கவலையை மேலும் மோசமாக்கியது.

அவனிடம் சொல்வாள்" நீ நன்றாக வளர்ந்து ஆளாக வேண்டுமானால் உனக்கென்று சில மனித மேம்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று உதாரணங்கள் மூலம் விளக்கினாள்.

"வருமான வரிக்கந்தோரிலிருந்து அதிகாரிகள் வந்தபோது லோலோ ஓடி ஒளிந்தாரே. அது நேர்மையற்ற செயல் அல்லவா? அதை நீ பின்பற்றக்கூடாது."

பணக்காரப் பெற்றோர்கள் ரம்ழான் பண்டிகை காலத்தில் தங்கள் பிள்ளைகளின் ஆசிரியர் களுக்கு விலை உயர்ந்த ரீ.விகளை பரிசாகக் கொடுப்பார்கள். ஆசிரியர்கள் அக் குழந்தைகளுக்கு நிறையப் புள்ளிகளை வாரி வழங்குவார்கள்.

மாணவர்கள் அதையிட்டு பெருமை கொள்வார்கள். தம்பட்டமடிப்பார்கள். அவ்வாறு பெற்றோர்கள் கொடுத்தது தவறு.

குழந்தைகள் தவறான வழியில் முன்னுக்கு வர முயற் சிப்பதும் தவறு. எதிலும் சம பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டும்"

உனது பிறந்த நாட் பரிசாக ஒரு சேர்ட் வாங்கித்தந்த போது நீ அதை அப்படியே உனது அறையில் மறைத்து வைத்துவிட்டாய். உனக்குப் பிடிக்கவில்லையென்றால் நேரே சொல்ல வேண்டியதுதானே. இவ்வாறு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நற்பண்புகளை அவன் மனதில் விதைத்தாள்.

ஒபாமாவின் தாய்க்கு எந்த மனிதனும் தன் சிந்தனைத் திறனால் தனது வாழ்வின் திசையை மாற்றியமைக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை இருந்தது.

ஜம்பொன்

விதியை நம்பி வாழும் ஒரு நாட்டில் தனி நபராக நின்று போராட வேண்டி ஏற்பட்டது. இதில் அவளுக்கு தோன்றாத் துணையாக இருந்தது ஒபாமாவின் சொந்தத் தந்தையே. அவர் அப்போது வெகு தொலைவில் இருந்தாலும் அவரே அவளின் ஆத்மார்த்த குரலாக விளங்கினார்.

இப்போது அதிகமாக அவரின் கதைகளைச் சொல்லி மகனின் இலட்சியத்திற்கு வடிவம் கொடுத்தாள். (தொடரும்)

# உலகின் பல்வேறு நாடுகளில் தாக்குதல் நடத்த அல்-கொய்தா சதித் திட்டம்

## அமெரிக்கா எச்சரிக்கை

(புதுடில்லி)

அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தாக்குதல்களை நடத்த அல்-கொய்தா அமைப்பு சதித் திட்டம் தீட்டியுள்ளது என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

அல்கொய்தா பயங்கரவாதிகள் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் புதிய தாக்குதல்களை நடத்த சதித்திட்டம் தீட்டியுள்ளனர். அமெரிக்கா, பாகிஸ்தான், அப்கன், இந்தியா, அவுஸ்திரேலியா, மேற்கு ஆசியாவில் உள்ள அமெரிக்கா நட்பு நாடுகள் மற்றும் ஐரோப்பாவில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படலாம்.


பயங்கரவாதிகளின் இந்த சதித் திட்டத்தை முறியடிப்பது தான் அமெரிக்காவின் நோக்கம் பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுக்காதவரை பாகிஸ் தானிலும் ஆப்கானிலும் அமைதியான சூழ்நிலை ஏற்படாது பயங்கரவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் பரப்பளவு அதிகரித்துள்ளது. ஆப்கனில் மீண்டும் தங்கள் செல்வாக்கை நிலை நிறுத்த தலிபான் அமைப்பு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

ஆப்கன் மக்களுக்கு சேவை செய்யும் வகையிலான, நிலையான திறமையான அரசை ஏற்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் பாகிஸ்தானில் நிலையான அரசை ஏற்படுத்துவதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# காஷ்மீர் விவகாரத்தில் தலையீடு இல்லை

## ஒபாமா அறிவிப்பு

(வோஷிங்டன்)



காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு இருக்காது என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் முன்னேற்றத்திற்கு அமெரிக்கா உதவி செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையே அமைதி நிலவ அமெரிக்கா எப்போதும் உறுதுணையாக இருக்கும் என அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.


இதேவேளை, காஷ்மீர் விவகாரம் தனிப்பட்ட பிரச்சினை என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அடிக்கடி நிலவும் பதற்ற நிலை மாறி அங்கு அமைதி திரும்ப அமெரிக்காவின் உதவி தேவைப்பட்டால் தயங்காது செய்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் உடனான அமெரிக்காவின் புதிய ஒப்பந்த கொள்கை பற்றியும் அவர் தெரிவித்தார். (5)

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்

## அதிபர் சர்தாரி விருப்பம்

(இஸ்லாமாபாத்)



மும்பைத் தாக்குதலுக்குப் பின் நின்று போன இந்தியா -பாகிஸ்தான் இடையேயான இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் இருநாடுகளுக்கு இடையே நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என பாகிஸ்தான் அதிபர் சர்தாரி வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் செனட் மற்றும்தேசியசட்ட சபையின் கூட்டுக் கூட்டத்தில் அதிபா சர்தாரி பேசியதாவது,

காஷ்மீர் பிரச்சினை உட் பட இந்தியா-பாகிஸ்தான் இடையேயான அனைத்து பிரச்சினை களுக்கும் சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் தொடரும். இரு நாடுகளின் உறவுகளும் மேம்பட வேண்டும். மும்பை தாக்குதல் காரணமாக நின்று போன இரு தரப்பு பேச்சு வார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என நம்புகிறேன்.

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த பாகிஸ்தான் முழு முயற்சியில் இறங்கியுள்ளது. எங்கள் அரசு அதற்கு முழு ஒத்துழைப்பு அழித்து வருகிறது இவ்வாறு சர்தாரி கூறினார். (5)

# இந்தோனேசியாவில் அணை உடைத்ததில் உயிரிழந்தோர் தொகை 77 ஆக உயர்வு

(ஜகார்தா)

இந்தோனேசியாவில் கடந்த வெள்ளிக் கிழமை அணை உடைந்து குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்ததில் பலியானோர் எண்ணிக்கை 77ஆக உயர்ந்துள்ளது. காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டோரை தேடும் பணி முழு வீச்சில் நடக்கிறது.



இந்தோனேசியாவில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது.

மழைக் காலத்தில் மண் சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அழிவு ஏற்படுவது இங்கு அடிக்கடி நடக்கும். சமீபத்தில் பெய்த கன மழையால் தலை நகர் ஜகார்த் தாவில் உள்ளசிது கின்துங் அணை கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை திடீரென உடைந்தது.

அருகில் இருந்த குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் புகுந்ததில் 300 வீடுகள் இடிந்தன. மேலும் 200 வீடுகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 77 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் காணாமல் போன நூற்றுக்கும் மேற்பட்டவர்களைத் தேடும் பணி நடக்கிறது. (5)

# பாகிஸ்தானில் 26 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் வட மேற்குப் பகுதிகளில் பதுங்கி இருக்கும் தலிபான் மற்றும் அல் கொய்தா தீவிரவாதிகள் மீது பாகிஸ் தான் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

பாகிஸ்தானில் கடந்த வெள்ளிக் கிழமை நடத்திய குண்டு வெடிப்பை அடுத்து இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியது.

மோக்மண்ட் என்ற இடத்தில் தீவிரவாதிகள் பலர் பதுங்கியிருந்தனர். அவர்கள் மீது பாகிஸ்தான் இராணுவத்தின் ஹெலிகொப்டரில் சென்ற படி தாக்குதல் நடத்தினார்கள். இதில் 26 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். (5)

**உலக தரிசனம்**

# தீவிரவாதிகள் பட்டியலிலிருந்து தலிபான்களை நீக்க வேண்டும்

## ஐ.நா'விற்கு ஆப்கான் கோரிக்கை


(காபூல்)

தலிபான் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை அமைதி வழிக்கு திரும்ப வைக்க அமெரிக்கா முயற்சித்து வருகிறது.

இதன் மூலம் அங்கு நடக்கும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களை போட்டியிட வைக்க திட்டமிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது ஹர்சாயுப் இதற்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகின்றார்.

எனவே அவர் ஐ.நா. சபைக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதில் அல் கொய்தா இயக்கத்துடன் தொடர்பு இல்லாத தலிபான் இயக்க தலைவர்களை தீவிர வாதப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (5)



பூமி வெப்பமடைந்து வருவதால் பருவநிலை மாற்றங்கள் ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு சர்வதேச வனவிலங்கு நிதியம் நேற்று உலகம் முழுவதும் இரவு 8.30 முதல் 9.30 மணி வரை (எர்த் அவர்) விளக்குகளை அணைக்கும்படி கேட்டுக்கொண்டது. இதையடுத்து மலேசியாவின் கோலாலம்பூரில் மின் விளக்குகள் அணைக்கப்படுவதற்கு முன்பும் முதல் படம்) அணைக்கப்பட்ட பின்பும் (அடுத்த படம்) தெரிந்த இரட்டைக் கோபுரங்கள்.

# தலிபான்களின் ரொக்கெட் தாக்குதலில் அமெ.படையினரின் வாகனங்கள் அழிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நேட்டோ அமைப்பின் வாகன மற்றும் உணவுக் களஞ்சியத்தில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதில் 12 கன்டெய்னர்கள் மற்றும் சில வாகனங்கள் அழிக்கப்பட்டன. பாகிஸ்தான் தென் மேற்குப் பகுதியில் பெஷாவரின் புறநகர்ப் பகுதியில் உள்ளது பர்காத் டெர்மினல். ஆப்கானில் உள்ள நேட்டோ மற்றும் அமெரிக்கப் படைகளுக்காக சரக்குகளை கொண்டு செல்லும் லொறிகள் இங்கு நிறுத்தி வைக்கப்படும். அத்துடன் படைகளுக்கு கொண்டு செல்வதற்கான உணவுப் பொருட்கள் இங்கிருந்து தான் ஏற்றி அனுப்பப்படும்.

இந்த வாகன மற்றும் உணவுக் களஞ்சியத்தில் பயங்கர வாதிகள் நேற்று முன் தினம் குண்டுகளை வீசியதோடு ரொக்கெட் குண்டுகளையும் வீசி தாக்குதல்நடத்தினர்.



இதில் நான்கு வாகனங்கள் அழிந்ததோடு டெர்மினல் அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது. 12கன்டெய்னர்கள் சேதம் அடைந்தன. இரண்டு வாரங்களில் இரண்டாவது முறையாக இங்கு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன் ஆப்கானிஸ் தானில் உள்ள அமெரிக்கப் படையினருக் காக அனுப்பி வைக்கப்பட்ட 300 கன் டெய்னர்கள் மற்றும் வீரர்கள் சென்ற வாகனங்களை பயங்கரவாதிகள் அழித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# விடைத்தாள்கள் திருத்தும் பணிக்கு மதிப்பீட்டாளர்களை தெரிவு செய்தல்

(கொழும்பு)

பாடசாலைமட்டத்தில 2009 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ள பொதுப் பரீட்சைகளில் விடைத்தாள்கள் திருத்தும் பணிக்காக மதிப்பீட்டாளர்களை தெரிவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர்அனுர எதிரி சிங்க தெரிவித்தார்.

இதற்கமைய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை , கல்விப்பொதுத்தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகள் , பொதுத் தகவல் தொழில் நுட்ப பரீட்சை என்பவற்றுக்கான மதிப்பீட்டாளர்கள் தெரிவு செய்யப் படவுள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார். (5-4)

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா வருவோர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து வவுனியா முகாம்களில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் 33ஆயிரமாக இருந்த இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை கடந்த வெள்ளிக்கிழமை 49 ஆயிரத்தை எட்டி இருக்கிறது.

தொடர்ந்து வருவோரை சமாளிக்கும் வகையில் மேலும் மூன்று புதிய முகாம்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பதினாறு முகாம்களில் 47 ஆயிரத்து 809 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அருணாசலம் முகாம்களுக்கு அருகில் புதிதாக மூன்று முகாம்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. முகாம்களில் உள்ள மக்கள் குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கி வருவதால் யுனிசெப் நிறுவனம் நீர்ப்பாசனம் திணைக்களம் என்பன முகாம்களுக்கும் நீரை வழங்குவதற்காக புதிய திட்டங்களை அமுல் நடத்த உள்ளன. மல்வத்து ஓயாவில் இருந்தும் கல்லாற்றில் இருந்தும் நீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாம்களில் உள்ள மக்களுக்கு தேவையான உணவு வகைகளை வழங்க உலக உணவுதிட்டமும் தொண்டர் நிறுவனங்களும் முன்வந்துள்ளன. முகாம்களில் பரவியுள்ள அம்மை நோயை கட்டுப்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர்களை வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல இரண்டு பஸ்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை உறவினர்களுடன் தொடர்பு கொள்ள வசதியாக நாளை (செவ்வாய்க் கிழமை) முதல் சகல முகாம்களிலும் இரண்டு தொலைபேசிகள் பொருத்தப்பட இருப்பதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார். (6)

# கொழும்பில் கப்பம் கேட்டு மிரட்டிய இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் வர்த்தகர் ஒருவரிடம் 50 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு கொலை அச்சுறுத்தல் விடுத்த இருவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது, கொழும்புகொட்டாஞ்சேனையிலுள்ள வர்த் தகர் ஒருவரை தொலைபேசியில் மிரட்ட 50 இலட்சம் ரூபாவைக் கப்பமாக தமது வங்கிக் கணக்கில் வைப்பிலிட வேண்டுமென்றும் இல்லையெனில் அவரை குடும்பத்துடன் கொல்லப் போவதாக இருவர் மிரட்டியுள்ளனர்.

தனக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டலை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்திய வர்த்தகர் புலனாய்வுப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய இருவரையும் தொடர்பு கொண்டு கப்பப் பணத்தை 10 இலட்சமாக குறைத்ததாகவும் பணத்தை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண் டுள்ளார்.

வர்த்தகரின் வேண்டுதலுக்கு இணங்கிய இருவரும் வர்த்தகர் கூறிய கொட்டாஞ் சேனை வங்கி ஒன்றுக்கு அருகில் கப்பப் பணத்தை வாங்கியபோது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுர சேனநாயக்க தலைமையில் மறைத்திருந்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் இவ்விருவரையும் பணப்பையுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் இருவரும் திருகோணமலையைச் சேர்ந்த தமிழர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் இதற்கு முன்னர் இடம்பெற்றுள்ள கப்பங்களிலும் இவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் இவர்களது திருமலை விலாசங்களை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் குழு ஒன்று திருமலை சென்றுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

# நலன்புரி நிலையங்களிலுள்ள மாணவர்களின் விபரங்களை திரட்ட நடவடிக்கை

(கொழும்பு)


கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுமாறு பரீட்சைத் திணைக்களம் உரிய தரப்புக்களுக்கு ஆலோசனை வழங்கி யுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்கள் கிடைத்தபின்னர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உயர் தரப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்கள் பற்றிய முறையான பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய அவர்களுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.


க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)



இடமாற்றம் பெற்றுச் சென்ற ஐ.சௌந்தலாதேவி அம்மாவின் பிரிபுபசார வைபவம் கைதடிஅஞ்சலகத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் அவருடன் அஞ்சல் அதிபர் ஐயாத்துரைக்குருக்கள்,தற்போதைய தபால் அதிபர் இ.தயாபரன் மற்றும் உப அஞ்சல் அதிபர்கள்,தபால் ஊழியர்கள் காணப்படுகின்றனர்.



யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கு நடைபெற்ற ஆளுமை வளர்ச்சி பற்றிய கருத்தரங்கினைப் பருத்தித்துறை சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நடத்துவதைப் படத்தில் காணலாம்.



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்குவோரை கௌரவிக்கும் நிகழ்வில் மலருக்கு கட்டுரை வழங்கியமைக்காக ஆன்மீகச் சொற்பொழிவாளர் *செஞ்சொற்செம்மல்* இரா.கேதீசன் பொன்னாடை போர்த்தி *ஞானச்சுடர் விருது* வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு உதவி புரியும் முகமாக நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலய முன்றலில் வைக்கப்பட்ட உண்டியல் மூலம் சேகரிக்கப்பட்ட 35ஆயிரம் ரூபா நிதியுதவியினை மக்கள் சார்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவன் ஆலய குரு கிருபானந்தக்குருக்கள் ஆகியோர் நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிப்பதனை படங்களில் காணலாம்.



# இந்தியாவில் தொழில்முறை தகவல் பரிமாற்ற படிப்புகள்



ஆசியாவில் தொழில்நுட்பம் சார்ந்த தொழிற்சாலைகளின் தகவல் பரிமாற்றத் தேவைகளை நிறைவேற்றுவதில் The Writers Block என்னும் தொழில்நுட்ப தகவல் பரிமாற்ற பயிற்சி மையம் சிறந்து விளங்குகிறது. உலகளாவிய நிறுவனங்களுக்கு தொழில் முறை தகவல் பரிமாற்றம் மற்றும் வெளியிடும் சேவைகளை இது அவுட் சோர் சிங் செய்து வருகிறது.

இந்த நிறுவனத்தின் சேவைகள் ஐ.டி., டெக்னோலஜி புராடக்ட் மற்றும் அவுட்சோர் சிங், ஐ.டி.இ.எஸ், நிதி, ஏரோஸ் பேஸ், இராணுவம் , கப்பல் கட்டும் தொழில் , உற்பத்தி போன்ற பல துறைகளிலும் பயன்படுகிறது. இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட இந்த நிறுவனமானது இந்தியாவில் முதன்முதலாக பட்டமேற்படிப்புகளை தொழில் முறை தகவல் பரிமாற்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

எந்தவொரு தொழிலின் வெற்றியையும் தீர்மானிக்க தொழில் முறை தகவல் பரிமாற்றம் அத்தியாவசியமானதாக மாறிவரும் சூழலில் அதன் தேவைக்கேற்ப அறிமுகப்படும் இந்த படிப்புகள் மிகவும் பயன்தரும் என்று நம்பப்படுகிறது. பல்கலைக்கழகம் நிறைவு செய்யத் தவறிய வெற்றிடங்களை இந்த படிப் புகள் முழுமை செய்யும் என்றும் கூறப்படு கிறது.

ஏற்கனவே அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்த படிப்புகள் மிக மிக வரவேற்புப் பெற்று விளங்குகின்றன.

3 செமிஸ்டர்களாக (பருவகாலம்) நடத்தப்படும் பி.ஜி.டி.டி.சி படிப்புகளை ஓராண்டில் படிக்கலாம். இந்த படிப்புகளை முடிப்பவர்களுக்கு உறுதியான வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன. படிப்பை வெற்றிகராமாக முடிப்பவர்கள் தொடக்கத்திலேயே ஆண்டுக்கு சுமார் 8 ஆயிரம் டொலர்களை ஊதியமாகப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாகத் தான் இதில் சேர முடியும்.

இந்த படிப்புகள் , கட்டணங்கள் பற்றிய முழு விபரங்களை www. twb.in தளத்தில் பார்த்துக் கொள்ளலாம். விரைவிலேயே சொப்ட்வெயர் ,ஐ.டி, இ-லேர்னிங், இன்ஸ்ட் ரக்ஷனல் ரிரெயினிங் ,இராணுவச் சேவை உற்பத்தி, ஓட்டோ மொபைல்,பப்ளிஷிங்,டிஜிட்டல் மீடியா ஆகிய துறைகளில்,பணியாற்ற ஒரு லட்சம் தொழில்துறை தகவல் பரிமாற்ற வல்லு நர்களுக்கான தேவையிருப்பதால் இந்தபடிப்புகளை மேற்கொள்வது சிறப்பான எதிர்கால வாய்ப்புகளைத் தரும் என நம்பப்படுகிறது.




ஆர்.யூ.பாலமுருகன்

# தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் புதுப்பிக்கப்படும் "தமிழ்"

தமிழ்மொழியினை கொம்பியூட்டர் யுகத்துக்கு ஏற்றபடி புதுப்பிக்கும் முயற்சியில் தமிழ் நாட்டில் உள்ள தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் இறங்கியுள்ளது. பொது நிர்வாகம், கல்வி,கோயில் வழிபாடு,மீடியா,சினிமா என தமிழ் மொழியின் எல்லைகள் விரிவடைந்து வருகிறது. இதை எதிர்கொள்ள தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் எங்கும் தமிழை பயன்படுத்திக்கொள்ளும் வழி வகைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இ-டிக்ஷனரி ஒன்லைன் மொழிபெயர்ப்பு ,குரலை கேட்டு எழுத்தாக்கும் சொப்ட்வெயர் கள் வடிவமைத்தல்,தமிழ் எழுத்துக்களை எளி மைப்படுத்துதல் தமிழ் பாடங்கள் மற்றும் கற்பித்தல் முறைகளை மாற்றியமைக்கும் முயற்சிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர தமிழகத்திலும் தமிழகத்துக்கு வெளியிலும் கிடைக்கும் தமிழ் புத்தகங்கள், பனை ஓலை குறிப்புகள், கல்வெட்டுகள் ஆகியவற்றை பாதுகாக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. படிப்படியாக இவற்றை கொம்பியூட்டரில் பதிவு செய்யவுள்ளனர்.




தமிழில் உள்ள அனைத்து பி.ஹெச்.டி மற்றும் எம்.பில் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் பிற ஆய்வுக்கட்டுரைகள் இணையத் தளத் தில் வெளியிடும் பணியில் நடந்து வருகிறது. இதனால் மீண்டும் பழைய ஆய்வுத் தலைப்பையே மற்றொரு மாணவர் தேர்வு செய் வதை தவிர்க்க முடியும் தமிழ் ஆய்வு கண்டு பிடிப்புகளை வெளியிட ஒரு இணையத் தள பத்திரிகையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அண்மையில் பூம்புகார், புள்ளிமான் கோம்பை போன்ற இடங்களிலும் சிந்து சம வெளி நாகரிகத்தை சேர்ந்த பதிவுகள் கிடைத்தன. இவற்றை ஏற்கனவே ஆதிச்ச நல்லூரில் கிடைத்த பதிவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் பணிகளும் நடந்து வருகின்றன.

# இன்னும் உங்கள் வலை மனையைக் கட்டவில்லையா?

*சென்ற வாரத் தொடர்ச்சி*

BLOG அமைப்பதற்கான சொப்ட்வெயர் தொகுப்புகள் கிடைக்கின்றன. ஆம். இதனை வழக்கமாகப் பயன்படுத்தும் வகையில் சொப்ட்வெயர் என அழைக்க முடியாது. சொப்ட்வெயர் சேவை என்று வேண்டுமானால் கூறலாம். கீழ்க் காணும் மூன்று தளங்கள் இவ் வகையில் பிரபலமானவை. அவை

1.Google Blogger/Blogspot(www.bloger.com)
2. Windows Live Space (http://spaces.live.com)
3.Wordpress(www.wordpress.com)

**முதலில் பிளாக் என்பது என்ன? என்று பார்க்கலாம்.**

web log என்பதன் சுருக்கமே BLOG. அடிப்படையில் இது ஒரு ஒன்லைன் பத்திரிகை எனலாம். இதனை தனிநபர் தகவல் அறிக்கையாகவும் வைத்துப் பயன்படுத்தலாம். அல்லது தங்கள் தொழில்களுக்கான அறிவிப்பாகவும் பயன்படுத்திக்கொள்ளலாம். தனிநபர் வலை மனையில் அவர்களின் கருத்துக்கள்,அனுபவங்கள், தாங்கள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணம், ரசித்த கவிதை, படித்த புத்தகம், ருசித்த குழம்பு என எதனை வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம். இது வளர வளர ஒரு சுய சரிதையாக மாறிவிடும். உங்களுக்குப் பின்னரும் உங்கள் சந்ததியினர் மற்றும் பிறர் பார்த்து உங்களைப் பற்றி அறிந்துகொள்ளலாம். வர்த்தக ரீதியான வலை மனைகள் உங்கள் வர்த்தகம் குறித்த மாற்றங்களை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்கும் அறிவிப்பு பலகைகளாகச் செயல்படும் விளம்பரங்களையும் இதில் சிலர் வெளியிடுகின்றனர்.

இனி பிளாக் தயார் செய்து வெளியிட இந்த மூன்று தளங்கள் தரும் சேவைகளை அடுத்து வரும் வாரங்களில் காணலாம். (தொடரும்)

# குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் இணையத்தளங்கள்

தங்களது இரண்டு அல்லது ஒரே வாரிசுகளை அனைத்து நல்ல விஷயங்களுடன் உருவாக்குவதே இன்றைய பெற்றோர்களின் கனவாக உள்ளது. கணனியும், இணையத்தளமும் இதற்கு பல வழிகளைத் தருகின்றது. ஒரு நல்ல கணனியுடன் இணையத்தள இணைப்பும் இருந்தால், குழந்தைகள் தங்கள் நேரத்தை நல்ல வழிகளில் பயன்படுத்த பெற்றோர்கள் துணைபுரியலாம்.

குழந்தைகளுக்கு விளையாட்டு என்பது அவர்களின் இயற்கையோடு இணைந்த ஒன்று. அதன் வழியாக்வே, அவர்களின் மன வளர்ச்சியை நல்ல முறையில் உருவாக்கலாம். உலக விஷயங்களைக் கற்றுக்கொடுக்கலாம். அதற்கென உள்ள பல நல்ல தளங்களில் சிலவற்றைக் க்காணலாம்.

◆ கல்வி,விளையாட்டுகள்,வேடிக்கையான கேம்ஸ்,ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமான தகவல்கள், கலை அம்சம் நிறைந்த 20ஆயிரத்திற்கும் மேலான இணையத் தொடர்புகள், வண்ணம் தீட்டிப் பழக தளங்கள், கணக்குப் பழக பயிற்சிகள் மற்றும் டவுண்ட் லோட் செய்து வைத்து விளையாடுவதற்கான கேம்ஸ் என அனைத்து வகைகளிலும் குழந்தைகளுக்கான இணையக் களஞ்சியமாக இயங்குகிறது www.links4kids.co.uk என்ற முகவரியில் உள்ள இணையத்தளம்.

◆ இன்டர்நெட் இணைப்பில் விளையாட நூற்றுக்கணக்கான கேம்ஸ் , கார்ட்டூன், மூவி கிளிப்புகள்,மியூசிக் வீடியோ, புதிர்கள், கற்பனைத் திறனை ஊக்கப்படுத்தும் செயல்பாடுகள், பக்கங்களுக்கு கலர் தீட்டுதல், பாதுகாப்பான வழிகளில் இணையத் தேடல் என வேடிக்கை விளையாட்டுக்களையும், கல்வி கற்றலையும் இணைத்துத் தருகிறது. www.alfy.com என்ற முகவரியில் உள்ள இணையத்தளம்.

◆ www.surfnetkids.com என்ற தளத்தில் பலவாறான வித்தியாசமான கேம்ஸ், வேடிக்கை விளையாட்டுகள், குழந்தைகளுக்கான தகவல்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள்,குழந்தைகளுக்குக் கற்றுத்தர விரும்பும் விஷயங்கள், நினைவாற்றலை வளர்க்கும் விளையாட்டுகள் என பல வகைகளில் குழந்தைகளுக்கான அனைத்து விஷயங்களும் வித்தியாசமான முறையில் தரப்பட்டுள்ளன.



◆ குழந்தைகளுக்கான இணையத் தளங்கள் அனைத்தையும் நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? அனைத்தையும் தராவிட்டாலும் கூட பெரும்பான்மையான தளங் களைப் பட்டியலிடுகிறது. www.kidsites.org என்ற முகவரியில் உள்ள தளம்.

◆ குழந்தைகளுக்கு கணக்குகளைத் தந்து, அவர்களின் சிந்திக்கும் திறனை வளர்க்கும் தளமாக விளங்குகிறது www.coolmath4kids.com . உலகளவில் இது சிறந்த தளம் என்ற பாராட்டினைப் பல அமைப்புக்களிடமிருந்து பெற்றது. குழந்தைகளுக்கு கூட்டல், கழித்தலில் தொடங்கி அல்ஜீப்ரா, பின்னங்கள்,டெசிமல் கணக்குகள் என கணக்கின் அடிப்படையையும், அதன் தொடர்பான பிறவற்றையும் கற்றுத்தரும் பல தளங் கள் இணையத்தில் உள்ளன.இவை அனைத் தும் கணக்கியலை விளையாட்டுக்கள் மூலமும், புதிர்கள் மூலமும் கற்றுத்தருகின்றன. அவற்றின் முகவரிகள் www.coolmath.com, www.coolmath4kids.com, www.science monster.com, www.spikersgamezone. com.

◆ www.kids.yahoo.com என்ற முகவரி யில் இன்னொரு அருமையான குழந்தைகளுக்கான தளம் உள்ளது. கேம்ஸ், மியூசிக், குறும் திரைப்படங்கள், ஜோக்ஸ், விளையட்டுக்கள் மற்றும் படித்துப் பாருங்கள் எனப் பல பிரிவு களில் இந்தத் தளம் குழந்தைகளுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கிறது.

◆ உங்கள் குழந்தை கணனியில் விளை யாடும் கார்ட்டூன் படங்களையும், மற்ற கரக்டர்களையும் தன் கணனியில் வைத்துக்கொள்ள விரும்புகிறதா? அல்லது ஹோம் பேஜகா வைத்து இன்டர்நெட்டை இயக் கியவுடன் வரவேண்டும் என விரும்புகிறதா? இந்த ஆவலை நிறைவேற்றுவதற்காகவே www. hitentertainment. com என்ற தளம்இயங்கு கிறது. குழந்தைகள் உலகின் பல கரக்டர்கள் இங்கு உள்ளன. இந்த கரக்டர்கள் பங்குகொள்ளும் சிறிய கதைகள் குழந்தைகளின் மனதில் நல்ல உறுதியை வளர்க்கின்றன.

◆ இரண்டு வயதிலிருந்து எட்டு வயது வரையிலான குழந்தைகளுக்கான அனைத்து விளையாட்டுக்களையும்,கற்றுக்கொள்ள வேண்டிய தகவல்களையும் தருகிறது. www. pbkids. org என்ற முகவரியில் உள்ள தளம். இந்த வகையில் இன்னும் சேர்க் கப்பட வேண்டிய தளங்களாக www.nickjr. com,www. uptoten.com, www. kids games. org, www.games kidsplay. net ஆகியவை உள்ளன.

◆ இத்தகைய விளையாட் டுக்களோடு குழந்தைகளுக் கான அடிப்படை அறிவியல் விஷயங்களையும் சேர்த்து விளை யாட்டுக்கள் மூலமாகத் தரும் ஒரு இணையத்தளம் www.playkids games.com இந்தத் தளத்தில் குழந்தைகள் செயல்படுகையில் பெற்றோர்களும்,உடன் இருந்து அவர்களுக்கு வழிகாட்டவேண்டும். கணனி, கணிதம், பிரச்சினைகளைத் தீர்த்து வெற்றிகாணும் வழிமுறைகள்எனப்பலவகைகளில்குழந்தைகளின்பொழுது போக்கும் வழிகளிலேயே, நிறைய அறிவு வளர்க்கும் விஷயங்களையும் தருகிறது இந்தத்தளம்.

◆ அனைத்து வயதிலும் உள்ள குழந்தைகளுக்கான தளம் www.funbrain.com. இந்தத் தளத்தில் கேம்ஸ் விளையாடும்போது, குழந்தைகளிடம் தகவல்களைப் பெற்று தொடரும் வகையில் கேம்ஸ்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், விளையாடும் ஆசையுடன் வரும் குழந்தைகளின் ஆர்வம் தூண்டப்பட்டு அவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய வழிகளையும் மேற்கொள்கிறது இந்தத் தளம். சொற்களைப் படிப்படியாக கற்றுக்கொடுக்கிறது. குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு அவர்களுக்கான பாடத் திட்டத்திற்கேற்ப விளையாட்டுக்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் பல விளையாட்டுக்கள் வடிவமைத்துத் தரப்படுகின்றன.

◆ உங்களுடைய மகள் மட்டும் விளையாடும் வகையில் பெண் குழந்தைகளுக்கான இணையத்தளம் உள்ளது. www. everythinggirl.com என்ற தளம் உங் களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளது.

வளரும் குழந்தைகள் கணனியை சாதாரணமாகப் பயன்படுத்தினாலே, அவர்களின் சிந்திக்கும் திறன் சீராக்கப்பட்டு கூராகும். அதில்,ஒருபகுதியாக இந்த இணையத் தளங்கள் இன்னும் பல படிகள் முன்னேறிச் சென்று பல வழிகளைத் தேர்ந்தெடுத்துத் தருகின்றன.

அயோக்கியனைக் கேட்காதே! அவன் தன் கருத்தையே சொல்லிக் கொண்டிருப்பான்.

– ஜப்பான்

வலம்புரி

## கலைஞர் கருணாநிதியை விட்டு டாக்டர் ராமதாஸ் ஏன் விலகவேண்டும்?

தமிழக முதல்வர் கருணாநிதியின் தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்திருந்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் அ.தி.மு.கவுடன் இணைந்துள்ளமை தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்தமிழர்களிடமும் இந்த விவகாரம் விவாதத்திற்குரியதாகவே உள்ளது.

கடந்த தேர்தலுக்கு முன்னதாக கலைஞர் கருணாநிதியால் 'போர் வாள்' என வர்ணிக்கப்பட்ட வை.கோபாலசாமி தி.மு.கவிலிருந்து விலகி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தை ஆரம்பித்தார்.

கருணாநிதியின் குடும்ப அரசியல் வை.கோபாலசாமியை புதிய கட்சி ஆரம்பிக்கத் தூண்டியது.

வை.கோவின் வெளியேற்றம் கருணாநிதிக்கு பெரியதொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தமை மறுக்க முடியாத உண்மை.

இருந்தும் கடந்த தேர்தலின்போது தி.மு.கவும் ம.தி.மு.கவும் கூட்டுச் சேரும் வாய்ப்பிருந்தும் கருணாநிதியின் விட்டுக்கொடா தன்மையால் தனது பரம எதிரியான செல்வி ஜெயலலிதாவுடன் வை.கோபாலசாமி கூட்டுச் சேர்ந்தார்.

எத்தனை இட்டல் இடைஞ்சல்கள் இருந்தாலும் ஜெயலலிதாவுடன் வைகோ சேரமாட்டார் என்ற முழுமையான நம்பிக்கையை உடைத்து செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.கவுடன் வைகோ கூட்டணி வைத்துக் கொண்டமை ஜெயலலிதாவை விட கலைஞர் கருணாநிதி மோசமானவர் என்பதை நிரூபிப்பதாக அமைந்தது.

இப்போது கலைஞருடன் நெருக்கமாக இருந்த டாக்டர் ராமதாஸும் அவரைவிட்டு விலகி செல்வி ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

அரசியலில் இவை சகஜமப்பா என்ற நடிகர் கவுண்டமணியின் பாணியில் கூறிவிட்டுப்பேசாமல் இருந்துவிடலாம் என்றால் அதுதான் முடியாது.

ஏனெனில்,கலைஞர் கருணாநிதியை விட்டு விலகிய வை.கோபாலசாமியும், டாக்டர் ராமதாஸும் சாதாரணமானவர்கள் அல்ல.

அவர்கள் ஈழத்தமிழர்களுக்காகத் துடிப்பவர்கள். அதற்காக பல தடவைகள் கைதாகி சிறை சென்றவர்கள். இத்தகைய இரு பெருந் தலைவர்களும் செல்வி ஜெயலலிதாவுடன் இணைந்துள்ளனர் எனில் அங்கு முக்கியமான காரணகாரியம் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

குறிப்பாக டாக்டர் ராமதாஸ் தி.மு.கவின் கூட்டணியில் இருந்து விலகி ஜெயலலிதாவுடன் சேர வேண்டிய தேவை என்ன?

இங்குதான் ஜெயலலிதா கூறிய விடயம் கவனத்தை ஈர்க்கின்றது. 'இலங்கையில் நடைபெறும் போருக்கான இந்திய மத்திய அரசின் அனைத்து ஆயுத உதவிகளும் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நன்கு தெரியும்' என்பதே அந்த ஜெயலலிதா கூறிய விடயம்.

கருணாநிதியுடன் கூட்டாக இருந்த டாக்டர் ராமதாஸ்–மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் ராமதாஸின் மகன் அன்புமணி அமைச்சராக இருந்த நிலையில், அவற்றை உதறிவிட்டு ஜெயலலிதாவுடன் இணைந்தமை செல்வி ஜெயலலிதா கூறிய விடயம் உண்மை என்பதை ஏற்றுக் கொண்டதன் அடிப் படையிலா என்ற ஊகங்கள் தவறாக இருக்க முடியாதல்லவா?

## ஊடகவியலாளர்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள்தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவது மற்றும் அதற்காக அவர்கள் தண்டிக்கப்படக் கூடாது போன்ற ஊடகவியலாளர்களின் உரிமைகள் சில அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான மனோரி முதேதுவேகம தெரிவித்தார்.

ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்துக்கு எதிரான வழக்கு விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றபோதே அதில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கும் போதே முதேதுவெகம இவ்வாறு கூறினார்.

எழுத்தாளர் ஒருவா பொது மக்களுக்கு வெளியிடும் கருத் தானது எந்த வித மோதல்களையோ அல்லது இனங்களுக் கிடையிலான முரண்பாட்டையோ ஏற்படுத்திவிடக் கூடாது என் பதே பொதுவான நிலைப்பாடு எனஅவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகம் ஆசிரியராகப் பணியாற்றிய மாதாந்த சஞ்சிகையைக் காண்பித்துக் கூறியமனோரி, திஸ்ஸ நாயகத்தின் கட்டுரையின் பாதுகாப்புத் தரப்பினருக்குக் களங் கம் ஏற்படுத்தும் வகையில் எந்த விதமான கருத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லையெனத் தெரிவித்தார்.

திஸ்ஸ நாயகத்திற்கு எதிரான வழக்கிற்காக சாட்சியங்களை மனோரி, மேல் நீதிமன்ற நீதிபதி டிபாலி விஜயசுந்தர விடம் சமர்ப்பித்தார்.

இந்த வழக்கின உண்மைத் தன்மை நியமிக்கப்படும் ஆணைக் குழுவினால்மாத்திரமே கண்டறிய முடியும் எனவும் தனி நபர்களால் அதனைத் தீர்மானிக்க முடியாதெனவும் அவர்கூறினார்.

(6)

## பிரித்தானியா கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் உள்ள கிங்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று அங்கு பயிலும் தமிழ் மாணவர்கள் தமிழினப் படுகொலையை நிறுத்தக்கோரி 24 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதில் கலந்துகொண்ட மாணவர்கள் உரத்தக் குரலில் கோசங்களை எழுப்பியவாறு வேற்றின சக மாணவர்களையும் இணைத்து இப்போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது அங்கு வந்த பிரித்தானிய காவல்துறையினர் அமைதியாக நடந்த இப்போராட்டத்திற்கு தமது ஒத்துழைப் பினை வழங்கினர்.

இதன் அடுத்த கட்டமாக நாளை செவ்வாய்க்கிழமை பன்னிரண்டு,மணிமுதல் மறுநாள் மதியம் பன்னிரண்டு மணி வரை சவுத் பாங் பல்கலைக்கழக மாண்வர்கள் ஏனைய பிரித்தானிய மாணவர்களுடன் இணைந்து 24 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இதன்போது மறைந்த ஈகைப்பேரொளி முருகதாஸின் நினைவஞ்சலியும் அதனைத் தொடர்ந்து இலங்கை பற்றிய வரலாறும் தற்போதைய நிலைவரமும் புகைப்படக் கண்காட்சியாகவும் ஒளிப்படமாகவும் மாணவர்களால் காண்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் அனைவரும் சென்று எழுச்சிப் போராட்டத்தில் பங்குபற்றுவர்.

இதில் அனைத்து பிரித்தானிய தமிழ் மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரித்தானிய தமிழ் மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

(6)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நாளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை காலை 11 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறுமென பிரதேச செயலாளர் எஸ். ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் விவசாயக் குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் தெரிவித்துள் ளார்.

(5-29)

## மண்டைதீவு பிரதான வீதிகள் விரைவில் புனரமைக்கப்படும்

### வேலணை பிரதேச சபைச் செயலாளர் உறுதி

(மண்டைதீவு)

மண்டைதீவில் மக்கள் பாவனையில் உள்ள பிரதான வீதிகள் விரைவில் புனரமைக்கப்படும் என வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் உறுதியளித்துள்ளார்.

மண்டைதீவு வாழ் மக்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நேரில் சென்ற வேலணை பிரதேசச்சபைச்செயலாளர் மக்கள் சந்திப்பொன்றை நடாத்தினார்.

இதில் மக்களால் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக வாரத்தில் திங்கள் ,வியாழக்கிழமைகளில் குடிநீர் வழங்கப்படுமெனத் தெரிவித்த வேலணைப்பிரதேச சபைச் செயலாளர் ,பிரதான வீதிகள் விரைவில் புனரமைக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

இச் சந்திப்பில் வேலணைப்பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகப்பொறுப்பதிகாரி ச. அருணன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான நந்தீஸ்,திருமதி சுமதி மற்றும் கஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(5)

## நான்கு சிங்களவர்கள் புலனாய்வுப் பிரிவினரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேணிய நான்கு சிங்களப் புலி உறுப்பினர்களை கைது செய்துள்ளதாக மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்பு துறைமுகத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள இந்த சிங்களப் புலி உறுப்பினர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட இருந்ததாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளிடம் இலட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களது பயங்கரவாத செயற்பாடுகளுக்கு குறித்த சிங்கள நபர்கள் ஒத்துழைப்பு வழங்கி வந்ததாகவும் உளவுப் பணிக்காக பயன்படுத்திய முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(ச-5)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை நடத்தும் உதைபந்தாட்டப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறு கின்றன.

இப்போட்டியில் நாளை செவ் வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியும் எதிர் கரண வாய் மத்தி விளையாட்டுக்கழக அணியும் பிற் பகல் 4 மணிக்கு அரியாலை ஐக் கிய கழக அணியும் எதிர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.

(5-4)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



நமது நாட்டுக்கு இப்போது வேண்டியது, இரும்பை ஒத்த தசைகளும் உருக்கைப் போன்ற நரம்புகளுமே.மேலும் ,எதனாலும் தடைப்படாத ,உலகின் விந்தைகளையும் மறைபொருள்களையும் ஊடுருவிப்பார்க்கவும் கடலின் அடிவரை செல்ல நேரிட்டாலும் எவ்வாறாயினும் கருதியை முடிக்கும் ஆற்றல் பெற்றனவும் ஆன மிகப் பெரும் வலிமை கொண்ட மனங்களுமே.


நாம் போதிய காலம் அழுதாயிற்று.இனியும் அழவேண்டாம் .எழுந்து நின்று ஆண்மையுடையவர் ஆகுங்கள். மனிதர்களை உருவாக்கும் மதமே நமக்கு வேண்டுவது. வீரர்களாக்கும் கொள்கைகளே நமக்குத் தேவை. எல்லா வகையிலும் வீரர்களை உருவாக்கும் கல்வியே நமக்கு வேண்டுவது. இதுவே உண்மைக்கு உரைகல்–உங்கள் உடலையும் அறிவையும் பலவீனமாக்கும் எதையும் விசம் என ஒதுக்கி விடு.அதில் உயிர் இல்லை. அது உண்மையானதல்ல. உண்மை வலிமை தரும். உண்மை தூய்மையாகும். உண்மை எல்லா அறிவுமாகும். உண்மை வலிமை தரவேண்டும்; ஒளி வீச வேண்டும் ஆற்றல் பொழியவேண்டும்.

# இலங்கைத் தமிழர்கள் தன்மானத்துடன் வாழ இந்தியாவில் மத்திய அரசு மாறவேண்டும்

## என்கிறார் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் தன் மானத்துடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்



றால் தற்போது இந்தியாவில் உள்ள மத்திய அரசு மாற வேண்டும் என்றுஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா, கனடா உட்பட பல்வேறு மேலை நாடுகளுக்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ள வாழும் கலை அமைப்பின் தலைவரும் ஆன்மீக குருவுமான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஐரோப்பாவிலும், கனடாவிலும்வாழும் ஆயிரக்கணக்கான புலம் பெயர்ந்த தமிழர்கள் என்னைச் சந்தித்து தமிழர்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் தொடர்பான தங்களுடைய வேதனைகளை தெரிவித்தனர்.


இலங்கைத் தமிழர்கள் குறித்த கொள்கையைப் பொறுத்த வரையில் இந்திய அரசு பெரும் தவறு செய்து கொண்டிருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இந்திய அரசு எப்போதுமே உரிய நேரத்தில் சரியான கொள்கைகளை வகுத்ததில்லை. அதனால் தான் தமிழ் மக்கள் அங்கு அவதிப்படுகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்வு காணாமல் போனதற்கு இந்திய அரசின் குறுகிய மனப்பான்மையும் முதுகெலும்பில்லாத கொள்கைகளுமே காரணம்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குறிப்பாக தெற்காசியாவுக்கான கொள்கைகள் மிகவும் மோசமானவை.

அண்டை நாடுகளுடனான இந்தியாவின் உறவு. அது நேபாளமாக இருந்தாலும், பங்களாதேஷ் அல்லது இலங்கையாக இருந்தாலும் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. தெற்காசிய நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியத்தில இந்தியா வலுமிக்க பெரிய தலைமையாக உருவாகி இருந்திருக்கலாம். ஆனால் அந்த வாய்ப்பு இப்போது கைநழுவிப் போய்விட்டது.

ஒருநாட்டின் பிரதமரை தேர்ந்தெடுக்கும் முழு உரிமையும் பொது மக்களுக்கு மட்டுமே உண்டு. அதை குறிப்பிட்ட ஒரு கட்சியின் தலைமைக்கோ அல்லது சமூகத்தில் உள்ள சிலருக்கோ எக் காரணத்தைக் கொண்டும் விட்டுக்கொடுத்து விட முடியாது என்றார். (6)




## சென்னை விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

(சென்னை)

சென்னை விமானநிலையத்திற்கு மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி மூலம் விடப்பட்ட வெடிகுண்டு மிரட்ட லைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன சென்னை விமான நிலைய வளாகத்தில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு ஒரு தொலை பேசிஅழைப்பு வந்தது.

இதையடுத்து ,விமான நிலையத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. பயணிகள், பார்வையாளர்கள் கடுமையான சோதனைக்குப் பின்னரே விமான நிலையத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பயணிகளின் உடமைகள் இரண்டு கட்டசோதனைக்குப் பின் விமானங் களில் ஏற்றப்பட்டன. விமான நிலையத்திற்குள் வந்தஅனைத்து வாகனங்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரைக் கண்டறியும் பணியில் விமான நிலைய பொலிஸார் ஈடுப்பட்டுள்ளனர். (6)

# ஈழத்தமிழருக்காக இரண்டு முறை தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டதாக கருணாநிதி கூறுவதில் உண்மையில்லை

## இராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்காக இரண்டு முறை தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டதாக முதல்வர் கருணாநிதி கூறுவதில் உண்மையில்லை எனவும் அதை யாரும் ஏற்கமாட்டார்கள் எனவும் பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கூறியுள் ளார்.

இது குறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில்,

1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.க செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அதனால் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி கோபமடைந்தார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு விவாதத்தின் போது, இந்தியாவின் கட்டுப்பாடற்ற தீவாய் தமிழகம் இருப்பதாக அறிவிக்கும் அளவுக்கு தி.மு.க ஆட்சி உள்ளது என இந்திராகாந்தி குற்றம் சாட்டினார்.அதற்கு மறுநாள் 1977 , ஜனவரி 31 இல்தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.


1972இல் தி.மு.கவிலிருந்து பிரிந்து அ.தி.மு.க.வைத் தொடங்கிய எம்.ஜி.ஆர் .தி.மு.க அமைச்சரவை மீது 54 ஊழல் புகார்களைக் கொண்ட பட்டியலை அளித்தார். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்டது.

அப்போது இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்படவே இல்லை. ஆனால்அதற்குப் பிறகு நெருக்கடி நிலை யைக் கொண்டு வந்த அதே காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க கூட்டணி அமைத்தது. இக்கூட்டணி தமிழக த்தில் 37 மக்களைவைத் தொகுதிகளில் வெற்றிபெற்றது. கருணாநிதி அளித்த நிர்ப்பந்தம் காரணமாக 1980ஆம் ஆண்டுஎம்.ஜி. ஆர்.தலை மையிலான அ.தி.மு.க அரசை ,மத்திய அரசு கலைத்தது.

1983ஆம் ஆண்டில் தான் இலங்கை இனப் பிரச்சினை தலைதூக்கத் தொடங்கியது. அப்போது கருணாநிதி சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். ஈழத் தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய எம்.ஜி ஆருக்கு நல்ல பெயர் வந்து விடக் கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியால் தான் கருணா நிதி ராஜினாமா செய்தார்.

1991 ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டது. வி.பி .சிங்க தலைமையிலான அமைச்சரவையில் தி.மு.க இடம்பெற்றிருந்தது. வி.பி.சிங் பதவி இழந்ததைத் தொடர்ந்து சந்திரசேகர் பிரதமரானார்.

வி.பி சிங்கோடு நெருக்கமாக இருந்தார் என்பதற்காக, ராஜீவ் காந்தி ஆசியோடு தி.மு.க அரசு அப்போதுகலைக்கப்பட்டது. அதற்கு சொல்லப்பட்டபல காரணங்களில் விடுதலைப் புலிகளை அடக்க கருணாநிதி தவறி விட்டார் என்பதும் ஒன்றாகும்.



ஆனால் விடுதலைப் புலிகள்அமைப்பு அப்போது இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமல்ல. எனவே ஆட்சி கலைப்புக்கு மத்திய அரசு கூறியது உண்மையான காரணம் மல்ல


1980 ஆம்ஆண்டில் இந்திரா காந்தி உதவியோடு எம்.ஜி.ஆர் ஆட்சியை கருணா நிதி கலைத்தார். அதே காரணத்தால் தான் 1991இல் ராஜீவ் காந்தியின் உதவியோடு தி.மு.க ஆட்சியும் கலைக்கப்பட்டது.எனவே இரண்டு முறைதி.மு.க ஆட்சி கலைக்கப்பட்ட தற்கும் உள்ளூர் அரசியல் ,டில்லியில் ஏற் பட்ட அதிகார மாற்றங்கள் மற்றும் அப்போது ஏற்பட்ட கூட்டணி மாற்றங்கள் உள்ளிட்ட வையே கார ணம்.

ஆகவே ஈழத் தமிழர்களுக்காகஇரண்டு முறை ஆட்சியை பலி கொடுத்தவர்கள் நாங்கள் என்று இனிமேலும் கருணா நிதி கூறினால் ,அதை யாரும் ஏற்கமார்ட்டார்கள் என ராமதாஸ் கூறியுள்ளார். (6)

# என்னுடன் நேரடி விவாதம் நடத்துவதற்கு மன்மோகன் விரும்பாவிட்டால் சோனியாவை அனுப்பலாம்

(லக்னோ)

என்னுடன் நேரடி விவாதம் நடத்த மன் மோகன் சிங்குக்கு விருப்பம் இல்லாவிட்டால் ,



சோனியாவை அனுப்பலாம் என்று அத்வானி கூறியுள் ளார்.

காங்கிரஸ் கூட்டணியின் பிரதமர் பதவி வேட்பாளராக மன் மோகன் சிங்கும், பா. ஜனதா கூட்டணியின் பிரதமர் பதவி வேட்பாளராக அத்வானியும் மோதுகிறார்கள். மன்மோகன் சிங், பலவீனமான பிரதமர் என்று அத்வானி குற்றம் சாட்டியுள்ளார். பதிலுக்கு, அத்வானி பிரதமர் பதவிக்கு பொரு த்த மற்றவர் என்று மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

பிரதமர் பதவிக்கு யார் தகுதியானவர், என்று தன்னுடன் நேரடி விவாதம் நடத்த வருமாறு மன் மோகன் சிங்குக்கு அத்வானி அழைப்பு விடுத்தார். ஆனால், அது அதிபர் ஆட்சி முறை நடக்கும் நாடுகளுக்கு மட்டுமே பொருத்தமாக இருக்கும் என்று கூறி,அந்த அழைப்பை காங் கிரஸ் நிராகரித்து விட்டது.

## அத்வானி அழைப்பு



இந் நிலையில் , அத்வானி மீண்டும் காங் கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார். உத்தர பிரதேசம் மாநிலம் பத்ரானாவில் நடை பெற்ற பிரசார பொதுக் கூட்டத்தில் அத்வானி பேசியதாவது,

அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் நடப்பதைப் போல, நாம் நேருக்கு நேர் விவாதம் நடத்தினால் நன்றக இருக்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நான் பல தடவை அழைப்பு விடுத்துள்ளேன். பா.ஜனதா பொதுக் கூட்டத்திலும் விவாதம் நடத்துவதற்க்கு பதிலாக தேர்தல் கமிஷனே இதற்கான கூட்டத்தை ஏற்பாடு செய்யட்டும்.


இந்த விவாதத்தில் பிரதமருக்கு விருப்பம் இல்லாவிட்டால், அவர் என்னுடன் விவாதம் நடத்துமாறு சோனியாவை கேட்டுக்கொள்ளலாம் என்றார். (6)




இலங்கைத் தமிழ்மக்களின் இன்னல் தீர தமிழக இந்துத்துறவியர் பேர வையின் சார்பாக சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்கு எதிரே நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடை பெற்றது.

# காம்பீர் பொறுப்பான சதம்: இந்தியா தற்காப்பு ஆட்டம்

## வெற்றிக்கு நியூசிலாந்து போராட்டம்



(நேபியர்)

காம்பீர், டிராவிட் மற்றும் சச்சினின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக் களையிழந்து 252 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கி லும் கைப் பற்றியது.


தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி கடந்த 26ஆம் திகதி நேபியரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ரைடர் 201 ஓட்டங்களையும் ரெய்லர் 151, மக்குலம் 115 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், இஷாந் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 305 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன் நிலைக்குத்



தள்ளப்பட்டது. இதில் டிராவிட் 83, லக்ஷ்மன் 76 மற்றும் டெண்டுல்கர் 49 ஓட்டங்களை யும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மார்டின் 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் டானியல் விக்டோரி, ஓ பிறின் மற்றும் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும் ரைடர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து பொலோன் அடிப்படையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஓட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 47 ஓட்டங்களை எடுத்திருந்து.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி காம்பீர்- டிராவிட்டின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்டது.

இதில் டிராவிட் 62 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 163 ஓட்டங்களை எடுத்து இரண்டாவது விக்கெட்டை இழந்தது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக காம்பீருடன் இணைந்த டெண்டுல்கர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிக்க இந்திய அணி நேற்று நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டு விக்கெட்டுக் களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் தனது ஐந்தாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த காம்பீர் 102 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 58 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பட்டேல், அணித் தலைவர் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

இதன்மூலம் இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியைத்தவிர்க்க 8 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 62 ஓட்டங்களை எடுக்க வேண்டும். இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும்.

## இங்கிலாந்து வீரர் பெக்கம் சாதனை



இங்கிலாந்து அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய வீரராக டேவிட் பெக்கம் சாதனை படைத்துள்ளார்.

வெம்பிளியில் நேற்று நடைபெற்ற ஸ்லோவாக்கியா அணியுடனான போட்டியில் விளையாடியதன் மூலமே பெக்கம் இந்தச்சாதனையைப் படைத்தார்.

இது டேவிட் பெக்கம் இங்கிலாந்து அணிக்காக விளையாடிய 109 ஆவது போட்டியாகும். இதன்மூலம் அவர் இங்கிலாந்து அணிக்காக உலக கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் வீரர் பொபி மூரின் சாதனையை (108) முறியடித்தார்.

உலக கிண்ண தகுதி காண் போட்டிக்கான பயிற்சி ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 4:0 என்ற கோல்கணக்கில் ஸ்லோவாக்கிய அணியை வீழ்த்தியது. இதில் டேவிட் பெக்கமும் ஒரு கோலை போட்டார்.

## தலைவராகச் செயற்பட மாட்டேன்

### பீற்றர்சன் தெரிவிப்பு



பிறந்த மண்ணில் உள்ள ரசிகர்கள் முன்னிலையில் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வழிநடத்த விரும்பவில்லை என இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் பிறந்த இவர், இங்கிலாந்து அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பயிற்சியாளர் பீற்றர் மூர்ஸுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இங்கிலாந்து அணித்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதற்கிடையே இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். ராகுல் ராவிட்டுக்குப் பதிலாக நியமிக்கப்படுவதாக அணியின் உரிமையாளர் விஜய் மல்லையா சமீபத்தில் அறிவித்தார். இந்நிலையில் டெய்லி மெயில் பத்திரிகையில் பீற்றர்சன் தெரிவித்துள்ள கருத்து றோயல் சலஞ்சர்ஸ் அணி நிர்வாகத்திற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 48



சர்வதேச கிரிக்கெட் சபையால் அனுமதிக்கப்பட்ட அளவிலும் பார்க்க முரளிதரனின் பந்துவீசும் கை கூடுதலாக வளைவதனால்தான் பந்தை எறிகிறார் என 5 தடவைகள் நடுவர் அறிவித்தார்.

இதனால் உடனடியாக இலங்கை அணித்தலைவர் அர்ஜுனரணதுங்க பிற்பகல் 3.03 மணிக்கு தனது அணி முகாமைத்துவத்துடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் மீண்டும் 3.08 மணிக்கு முரளிதரன் மீண்டும் பந்துவீச அழைக்கப்பட்டார். அப்போது முரளிதரன் தனது 6ஆவது ஓவரை வீசிய போது நடுவர் ஹெயார், 2 தடவைகள் (2ஆவது மற்றும் 6ஆவது பந்துவீச்சுக்கள்) 'பந்தை எறிகிறார் முரளிதரன்' என அறிவித்தார்.

இதனால் பிற்பகல் 3.17 மணிக்கு முரளிதரனின் பந்துவீச்சை நிறுத்திய இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க மீண்டும் நடுவர் டூனி, முனையிலிருந்து பந்து வீசுவதற்கு முரளிதரனை அழைத்தார்.

இதனால் மற்றைய நடுவரின் முனையிலிருந்து முரளிதரன் பந்துவீசியதையடுத்து ஆத்திரமடைந்த நடுவர் ஹெயார் தனது 'தீர்ப்புக் குறிப்பில்' (Decision Maker) பதிவுசெய்தார்.


எனினும் தேநீர் இடைவேளையின் பின் ஆட்டம் தொடர்ந்த போது முரளிதரன் மற்ற நடுவரின் முனையிலிருந்து பந்துவீசுவதை நடுவர் ஹெயார் கவனத்தில் எடுக்கவில்லை.

இதனால் முதல் நாள் ஆட்ட இறுதிப்பகுதியில் முரளிதரன் 12 ஓவர்கள் பந்துவீசி மார்க் வோவை (61) ஆட்டமிழப்பு செய்தார்.




இந்நிலையில் முதல்நாள் ஆட்டநேரமுடிவில் முரளிதரன் 18 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 58 ஓட்டங்களைக்கொடுத்து ஒருவிக்கெட்டை கைப்பற்றி இருந்தார். **(பயணிக்கும்)**

## எண் விளையாட்டு-52



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல் லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.





நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த பெண் மற்றும் சிறுவனையும், காயமடைந்தவர்கள் மாட்டு வண்டில் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதையும், பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள மக்களையும் படங்களில் காணலாம்.

## விடுதலைப் புலிகளின் 6 சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளின் 6 சடலங்களைக் கண்டெடுத்ததாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களின் பின்னர் நடத்தப்பட்ட தேடுதலின்போது இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது.

இந்தத் தேடுதலின் போது ரி.56 ரக 7 துப்பாக்கிகள் உள்ளிட்ட உபகரணங்கள் சிலவும் கண்டெடுக்கப்பட்டதாக பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டனர்.

(ச-3)

## அரசாங்க...

ஆனால் சர்வதேச நிதி அமைப்புகள், பல நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நிதி உதவிகளை வழங்கி வருவதுண்டு.

இலங்கைக்கான நிதி உதவிக்கான முதல் நிபந்தனையாக அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைக்கும்படி சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைகளை குறைப்பதுடன், தொழிற்சங்களின் உரிமைகளையும் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது என இலங்கை தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் அரச உத்தியோகத்தர்களின் பல சலுகைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## ஹோம்ஸ் - பத்மநாதன்...

அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரதிநிதி குமரன் பத்மநாதனுடன் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் தொலைபேசியில் பேச்சுக்களை நடத்தியதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த உரையாடல் வன்னியில் தங்கியுள்ள மக்கள் தொடர்பானது எனவும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதான்து அல்ல எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும்போது அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக மேலதிக தகவல்களை நாம் பெற விரும்புகிறோம். ஆனால் அது குறித்த உறுதியான தகவல் எதுவும் எம்மிடம் இல்லை என வெளி விவகாரச் செயலாளர் பாலித ஹோகன்ன இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போது நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனுக்கும் ஜோன் ஹோம்ஸுக்கும் இடையிலான இந்தக் கலந்துரையாடலை நோர்வேயே ஏற்படுத்திக் கொடுத்திருந்ததாக விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ச-5)

## சமாதானத்...

அவர் இதனைக் கூறினார்.

பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் எனவும் நாட்டில் எவரும் பயங்கரவாதத்தில் ஈடுபட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்று அவசியம்.

யுத்த நடவடிக்கையினாலும் பாதுகாப்பு நடவடிக்கையினாலும் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை மட்டுப்படுத்த முடியாது.

நல்லாட்சியை ஏற்படுத்த அரசியலமைப்பு பேரவையை நியமிக்காமல் இருப்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அதற்குப் பெயர் வழங்கப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் 3, 4 வருடங்களாக ஏன் இழுபறியாகவுள்ளது எனவும் கேள்வி எழுப்பினார்.

(ச-3)

## வன்னியில் நேற்றும் அகோர...

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 18 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

மாத்தளன் பகுதியை நோக்கி நேற்று எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்தனர்.

அம்பலவன்பொக்கணையிலுள்ள பிள்ளையார் கோவில் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 10பேர் உயிரிழந்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இடைக்காடு மற்றும் பச்சைப்புல்மோட்டை பகுதிகளை நோக்கிமேற் கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 13 பேர் உயிரிழந்தனர்.

அனைத்துப் பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்த எறிகணைகளில் 125 பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான புலேந்திரமகாராஜா ராஜஸ்ரீ (வயது 30), புலேந்திரமகாராஜா புவிராஜி (வயது 8), புலேந்திரமகாராஜா பைந்தனா (வயது 7), புலேந்திர மகாராஜா வைஸ்ணவி (வயது 1 1/2 மாதம்),

குலசேகரம் கந்தையா (வயது 65), பாலசுந்தரம் யுவராஜ் (வயது 49), பார்த்தீபன் (வயது 37), தவராஜா டினு (வயது 3), தம்பிராஜா ஜோன் நிவாஸ் (வயது 26), தியாகசிங்கம் கருணாநிதி (வயது 53), கோவிந்தசாமி (வயது 63), சுதாகரன் சுதர்மன் (வயது 12), மரியதாஸ் கேதீஸ்வரி (வயது 29), அன்ரனி மரியமலர் (வயது 32),

காந்தரூபன் ஞானம்மா (வயது 35), புவனேசன் சுசீலா (வயது 45), கனகசபை கந்தசாமி (வயது 45), கனகசபை அழகம்மா (வயது 73), கோவிந்தசாமி இராசம்மா (வயது 53), கறுப்பையா தர்மலிங்கம் (வயது 55), வேலாயுதம் சுதாகர் (வயது 32), தேசிங்கு கருணாநிதி (வயது 53), கவிபாலன் சயந்தன் (வயது 7), கந்தையா புஸ்பராஜா (வயது 46), தவராஜா டிலானி (வயது 3), தவராசா தர்மிலா (வயது 19), தவராசா தீபமலர் (வயது 40), தவராசா நிலக்ஷன் (வயது 12),

கணேசலிங்கம் ராஜ்குமார் (வயது 23), கணேசலிங்கம் யமுனாராணி (வயது 48), தர்மலிங்கம் தவராசா (வயது 38), காந்தரூபன் (வயது 1 1/2), காந்தரூபன் லதா (வயது 34), செ.புஸ்பராணி (வயது 48), கந்தன் தம்பையா (வயது 76), மருதன் கேதாரா (வயது 20), சேதுமாதவன் கிருஷ்ணன் (வயது 32), கார்மேகன் காருண்யா (வயது 1 1/2), தேவிபாலன் மதுசன் (5 மாதம்), வே.சின்னத்தம்பி (வயது 35), பா.குணாளன் (வயது 12), விஜிதரன் புவிதா (வயது 8), மதுரவாணன் பார்கவி (வயது 10), ஞானராஜ் மருதன் (வயது 7), கணேசலிங்கம் புவிதன் (வயது 3), கவிராஜன் கவிதா (வயது 4), கேவின்ராஜ் பிருந்தன் (வயது 5), கோபாலபிள்ளை பார்கவி (வயது 25), தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 30) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

(ச-5)

## வன்னிக்...

அணியினர் கடந்த புதன்கிழமை பானு மற்றும் லோரன்ஸ் ஆகியோர் வழிநடத்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதலையடுத்து படையினரின் 7ஆம் சிங்க ரெஜிமண்ட் தமது நிலைகளில் இருந்து 500மீற்றர் தூரம் பின்வாங்கியிருந்ததாகவும் இச்சமயத்தில் 58ஆம் படையணியன் படை அதிகாரி பிரிகேடியர் சவேந்திர சில்வா விடுறையில் இருந்ததாகவும், இதனையடுத்து உடனடியாக மறுநாள் அவர் களமுனைக்கு திரும்பியதாகவும் மேலும் மேலதிக படையினர் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கு அப்பகுதிக்கு நகர்த்தப்பட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 20ஆம் கஜபாகு படையினர் மீதும் நான்கு அலைகளாக விடுதலைப் புலிகள் புயலென தாக்கியதாகவும் இவர்கள் டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களையும் இலக்கு வைத்து தாக்கியதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## துப்பாக்கிச்...

(வயது 19) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

நேற்றுக் காலை உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரஸ்தாப இளைஞன் இன்று கொழும்புக்குச் செல்லவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-5)

## நாணய...

சமாளிக்கும் நோக்கத்துடன் சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்கு அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை வாஷிங்டன் நகரில் பசில் ராஜபக்ஷவும் மத்திய வங்கியின் தலைவர் அஜித் நிவாட் கப்ராலும் கடந்த வாரம் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இரு தரப்பும் தகவல் எதனையும் வெளியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

(ச-5)

## மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை...

20 சதுர கிலோமீற்றர் பிரதேசத்துக்குள் புலிகளால் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டுவரும் பொதுமக்களை அங்கிருந்து வெளியேற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மற்றும் ஏனைய சர்வதேச நாடுகள் பரிந்துரைக்கும் மனிதாபிமான மோதல் இடைநிறுத்தத்துக்கு நாம் தயார் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

அரசாங்கம் வகுக்கக்கூடிய வழிமுறைகள் எவை என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்காவிட்டாலும் கள நிலைமைகளைப் பொறுத்து அவை காலத்துக்கு காலம் மாற்றமடையலாம் என்று மட்டும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரு மனிதாபிமான மோதல் இடைநிறுத்தம் செய்து கொள்ளப்பட்டு, மனிதாபிமான தலையீட்டுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என, கடந்த வியாழனன்று நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் பின்னர், அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுடன் இணைந்து ஐ.நா. சார்பில் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருவது குறித்தும் இதன்போது கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்கள் மீது எறிகணைத் தாக்குதல் நடத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும் என்று அமெரிக்கத் தரப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு ஏதுவாக 48 மணிநேர மோதல் நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் செய்த போதும் புலிகள் அதற்கு இணங்காத காரணத்தினால் மக்கள் தொடர்ந்தும் அங்கு சிக்குண்டுள்ளனர் என்று இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் ஒரு மோதல் இடைநிறுத்தம் செய்து கொள்ளப்படுவதாயின் இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் வழிமுறைகளுக்கு அமையவே அது மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த அமைச்சர் ஹெகலிய, வெளியாரின் தலையீடோ, செல்வாக்கோ இது விடயத்தில் சகித்துக் கொள்ளப்படமாட்டாது என்று கூறினார்.

பொதுமக்களைக் கருத்தில் கொண்டு எதிரிக்கு எதிரான விமான மற்றும் கனரக ஆயுதப் பயன்பாட்டை நாம் நிறுத்திவிட்டோம். அதேநேரம், பொதுமக்களுக்குப் பின்னால் மறைந்திருந்து தாக்குவதன் மூலம் புலிகள் இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல,

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு போர் நிறுத்தம் குறித்து அரசாங்கம் ஆர்வம் கொள்ளவில்லை எனவும் பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றிய பின்னர் பாதுகாப்புப் படையினர் புலிகளை இல்லாதொழிப்பர் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் வியாழனன்று கூட்டப்பட்ட உத்தியோகப்பற்றற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் பின்னர் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் மனிதாபிமான மோதல் இடைநிறுத்தத்துக்கான கோரிக்கை இலங்கை அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-3,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.